# சிதம்பரம் நகராட்சி



## 2019 ம் ஆண்டு ஆனி திங்கள் 13–ம் நாள் 28.06.2019 வெள்ளி கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம் நடைபெறும்

## மன்றக்கூட்டப் பொருள்

1) பணியாளர்களின் 2019–20ம் ஆண்டிற்கு வருமான வரி பிடித்தம் மற்றும் இந்நகராட்சி ஒப்பந்த தாரர்களிடம் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி தொகைகளை E-Filling செய்வதற்கு நான்கு காலாண்டுகளாக பிரித்து E-Filling செய்ய லட்சுமி சிஸ்டம்ஸ், கடலூர் அவர்களிடம் அனுப்ப ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.50000/– செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**2)** இந்நகராட்சியில் ஒப்பந்த பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து பிடித்தம் செய்யப்பட்டு வருமான வரி தொகைளை அரசு கணக்கில் நிலுவை இன்றி செலுத்திவரும் நிலையில் 2009–10 முதல் 2015–16 வரை உள்ள ஆண்டுகளுக்கு வருமான வரி குறைவாக பிடித்தம் செய்தும் காலதாமதமாக செலுத்திய தொகைகளுக்கு உரிய அபராத தொகை செலுத்தக்கோரி வருமான வரி அலுவலகத்திலிருந்து கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து உரிய மேல்முறையீடு செய்ய இந்நகராட்சிக்குட்பட்ட கணக்காயர் லட்சுமி சிஸ்டம்ஸ் கடலூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் அபராத தொகையை தவிர்க்கும் பொருட்டு உரிய ஆவணங்கள் தாக்கல் செய்து மேல்முறையீடு செய்யபட்டு 2012–13 முதல் 2014–15 வரை தொகை குறைக்கப்பட்டதற்கான தணிக்கையாளர் ரூ.128000/–மும் 2009–10 முதல் 2015–16 வரை வருமானவரி தொகை செலுத்தியதற்கான ரசீதுகளின் அடிப்படையில் குறைகளை நிவர்த்தி செய்தமைக்கு ரூ.147500/– கட்டணம் செலுத்திடுமாறு திரு.D.கண்ணுசாமி பட்டய கணக்கர், கடலூர் அவர்கள் கட்டியல் அனுப்பியுள்ளார். அன்னாருக்கு தொகை வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வருமான வரி துறைக்கு மேல்முறையீடு செய்யப்பட்டு குறைகளை களைந்து நிவர்த்தி செய்தமைக்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலரிடம் முன் அனுமதி பெற்று தொகை வழங்கலாம்.

**3)** இந்நகராட்சி பேருந்து நிலைய கடிகார கோபுர கடை எண்கள் **1, 2** மற்றும் காலியிடம் கடை எண்.**6** ஆகியவற்றின் வரி விதிப்பு எண்கள் **1501, 1502** மற்றும் **3020** ஆகியவற்றை திரு.V.நடராஜன் என்பவர் பெயரில் பெயர் மாற்றம் செய்யக்கோரி திரு.ப.நடராஜன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். WP.**15234/2019** ஐ எதிர்த்து நகராட்சி சார்பாக திருமதி.K.புவனேஸ்வரி சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் எதிர் வழக்காடுவதற்கும் வழக்கறிஞர் செலவினம் ரூ.**15000/–** ஐ வழங்குவதற்கும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கறிஞர் கட்டணம் ரூ.**15000/–** வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1589/2018/அ1**

**4)** சிதம்பரம் நகராட்சி, கமலீஸ்வரன் கோயில் தெருவில் உள்ள ஆறுநாட்டு வேளாளர் மடம் சொத்து வரி விதிப்பு சம்மந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.S.A.No.277/2018 வரி குறைத்திடக்கோரி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் சிதம்பரம் நகராட்சி சார்பாக திரு.P.ஸ்ரீனிவாஸ் வழக்கறிஞர் ஆஜராகி வாதிதிட்டு வருவதற்கு வழக்காடு கட்டணம் ரூ.**15000/–** வழக்கிட கோரியுள்ளார். எனவே இத்தொகையினை வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.262/2003/அ2**

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வழக்கின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதில் பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**5)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கல்வி நிறுவனங்களுக்கு சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டது தொடர்பாக நிர்மலா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.**29217/2018**ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் சிதம்பரம் நகராட்சி சார்பாக திரு.P.ஸ்ரீனிவாஸ் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஆஜராகி

வாதிதிட்டு வருவதற்கு வழக்காடு கட்டணம் ரூ.15000/– வழக்கிட கோரியுள்ளார். எனவே மேற்படி தொகையினை வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**ந.க.எண்.4597/2018/அ2**

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வழக்கின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதில் பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**6)** இந்நகராட்சியில் நகரமைப்பு ஆய்வராக பணிபுரிந்து 31.10.2018ல் ஓய்வு பெற்றுள்ள திரு.D.ரகு என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு WP.No.30850/2018 முடிவு பெற்று 13.03.2019ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சூமற்படி தீர்ப்பில் அன்னாருக்கு ஓய்வு கால பணி பயன்கள் வழங்கவும் அன்னாரின் மீதான குற்ற ச்சாட்டு குறிப்பாணையின் மீது 6 மாத காலத்திற்கும் நடவடிக்கை எடுத்து முடிக்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வாதாடியதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/– வழங்கக் கோரி திரு.P.ஸ்ரீனிவாஸ் அவர்களின் கடிதத்தில் கோரியத ற்கிணங்க வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/–ஐ வழங்குவதற்கு நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1369/2018/சி1**

**7)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பாதாள சாக்கடை திட்ட தெரு ஆய்வு குழிகள் சாலையினைவிட பள்ளமாக உள்ளதால், அவற்றில் ஏற்படும் அடைப்புகளை திறந்து சரிசெய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு, நகராட்சிக்குட்பட்ட 36 இடங்களில் பாதாள சாக்கடை திட்ட தெரு ஆய்வுக் குழியினை உயர்த்தி கட்டும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.2.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணிக்கு நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2019–20–ன்கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2760 /2019/இ1)

**8)** இந்நகராட்சிக்குட்பட்ட நீர்நிலை பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோருவது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.M.செங்குட்டுவன் என்பவர் நகராட்சிக்கு WP.No.34552/2018 எதிராக வழக்கு தொடுத்துள்ளார். மேற்படி வழக்கிற்க்கு நகராட்சி சார்பாக வாதிட அரசு வழக்கறிஞர் திரு.V.ஜெயபிரகாஷ் நாராயணம் நியமிக்கப்பட்டுள்ளார். மேற்படி வழக்கிற்க்கு வழக்காடு கட்டணமாக ரூ.15000/– வழங்க கோரியுள்ளார். எனவே மேற்படி வழக்கறிஞர் அவசர அவசியம் கருதி தொகை ரூ.15000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2) வழக்கின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2027/2018/எப்1

**9)** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வேங்கான் தெருவில் உள்ள குருநமச்சிவாய மூர்த்தி மடத்தை சுற்றியுள்ள வீடுகள் மற்றும் ஆக்கிரமிப்புகளை நகராட்சியே அகற்ற வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றத்தில் திரு.N.வாஞ்சிநாதன் என்பவர் வழக்கு எண்.31136/2018 மூலம் வழக்கு தொடுத்துள்ளார். மேற்படி வழக்கிற்க்கு நகராட்சி ஆணையர் சார்பாக ஆஜராக திரு.V.ஜெயபிரகாஷ் நாராயணன் அரசு வழக்கறிஞரிடம் வழக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆவ்வழக்கிற்கு வழக்கு கட்டணமாக ரூ.15000/– வழங்க கோரியுள்ளார். எனவே வழக்கின் அவசர அவசியம் கருதி வழக்கு கட்டணம் ரூ.15000/– வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2) வழக்கின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**10)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட கீழ சன்னதியில் திரு.மங்கேஷ்குமார் என்பவர் தனது கடை மற்றும் வீட்டிற்க்கு முன்புறம் இடையூராக 5 நபர்கள் கடை வைத்துள்ளதாகவும் அதனை அப்புறபடுத்த வேண்டும் என சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண்.2955/2018 மூலம் வழக்கு தொடரப்பட்டு மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற கோரி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்க்கு நகராட்சி சார்பாக வாதிட்ட வழக்கறிஞர் திரு.P.ஸ்ரீநிவாஸ் அவர்கள் வழக்காடு கட்டணம் ரூ.15000/– வழங்க கோரியுள்ளார். மேற்படி வழக்காடு கட்டணம் ரூ.15000/– வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.557/2018/எப்1**

**11)** சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட நகரளவை தொகுதி எண்.4, பகுதி எண்.3 நகரளவு எண்.215ல் உள்ள திரு.S.பழனிசாமி மற்றும் பலரால் குரு நமச்சிவாய மடம் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் நகராட்சி சார்பாக வாதாட வழக்காடு கட்டணமாக ரூ.15000/– வழங்க அரசு வழக்கறிஞர் திரு.V.ஜெயபிரகாஷ் நாராயணன் கோரியுள்ளார். எனவே மேற்படி வழக்கின் அவசர அவசியம் கருதி வழக்காடு கட்டணமாக ரூ.15000/– வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) வழக்கின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1982/2019/எப்1**

**12)** சிதம்பரம் தேர்வு நிலை நகராட்சியில் 28.06.2019 அன்று நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டதீர்மானம்.

**பொருள்:**

நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண்.48800/2006/எல், நாள் 20.06.2019ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கண க்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண் மையை திறம்படுத்தவும், **தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி** என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 1.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களைஅனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்) எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம் இ1), நாள்.10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கண க்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் (TamilNadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர்

பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3)** தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணி யின் (TamilNadu Municipal Accounts Service ) கீழ் <u>தேர்வு நிலை நகராட்சிகளுக்கு</u> ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| நகராட்சி கணக்கு அலுவலர் | Municipal Accounts Officer | 1 |
| கணக்கர் | Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | AccountsAssistant | 1 |

மேற்கண்டவாறு TamilNadu Municipal Accounts Service பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (TamilNadu Municipal General Service) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம் /பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்காணும் பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ClassIV கணக்கர் பணியிடம் ஒன்று மட்டும்

**<u>அலுவலககுறிப்பு –</u>**மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண் .2851/2019/C1**

**13)** இந்நகராட்சி பொதுசுகதாரப்பிரிவில் இயங்கி வந்த பாக்கிங் (Fogging) மிஷின்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு, பழுது நீக்கம் செய்திட இயலாத காரணத்தினாலும், 2019–20–ம் ஆண்டிற்கு, கொசுக்கள் மூலம் தொற்று நோய் பரவாமல் தடுத்திடவும், புதிதாக பாக்கிங் மிஷின்கள் “Super Fog Fogging Machine “ 6 எண்கள் வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 4,40,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** அவசர அவசியம் கருதி ஒப்பந்தபுள்ளி கோரி 6 புதிய பாக்கிங் மிஷின்கள் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வாங்கிடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2083/எச்.1/2019**

**14)** **<u>சிதம்பரம் நகராட்சி</u>**

| வடிகால் திட்ட உபவிதிகள் | **Under Ground Drainage By – Law's** |
|---|---|
| 1920ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 138, 142, 147, 148, 149, 306(5), 306(6) ஆகிய பிரிவுகளின் படி வீட்டில் சாக்கடைகள் ஏற்படுத்தவும் மற்றும் கழிவுநீர் குழாய்கள் மற்றும் மல அறைகள் முதலிய சுகாதாரத்திற்கு உகந்த மற்ற அமைப்புகள் ஏற்படுத்தவும் வீடுகளுக்கு புதை சாக்கடை திட்டத்துடன் இணைப்புகள் கொடுப்பதற்குமான விதிகள். | Tamil Nadu District Municipalities Act 1920, Under sections 138, 142, 147, 148, 149, 306 (5), 306 (6) the statutory rules for provision of Residential Drainage System, Drainage pipes Septic tanks and other sanitary provisions and connecting them to the Underground Drainage System. |
| ஒருவர் தனக்காகவோ அல்லது மற்றவருக்காகவோ சாக்கடைகள் சுகாதாரத்திற்குரிய அமைப்புகள் அல்லது மற்றைய அமைப்புகளை புதிய அல்லது ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிங்களுக்கு அமைக்கவோ கட்டவோ அவைகளுக்கு மாறுதல்களோ செய்தால் அவர் கீழ்க்கண்ட விதிகளை பின்பற்ற வேண்டும். | One who for his own sake or others provides sanitary or other provisions for his new house or builds them for the existing buildings or makes alterations for the existing system should strictly follow the following rules and regulations. |
| **<u>மல நீரையும் அதனடியில் தேங்கும் அசுத்தங்கள் இவைகளை வெளியே தள்ள.</u>**<br><br>1. ஒவ்வொரு கட்டிடத்திலும், அதனைச் சேர்ந்த இடத்திலும் அதற்கு உகந்த சாக்கடையை அமைப்பதுடன் மற்றும் மழைத்தண்ணீரை மற்ற கழிவுநீர் முதலியவை தனியாகச் செல்வதற்கான வசதிகளும் செய்து கொள்ள வேண்டும். | 1.To discharge faces and night water (Stool waters) and stagnant dirt's, Except in places where is only open drainage system the drainage water discharged and the rain water accumulated form each building and its surroundings should have separate outlet facilities. |
| 2.வீட்டு கூரைகளிலிருந்து வீட்டின் சுற்றுப்புறங்களிலிருந்தும் மற்றுமுள்ள திறந்த வெளிகளில் இருந்தும் விழும் மழைத்தண்ணீர் மலக்கழிவு நீருக்கு என அமைக்கப்பட்ட சாக்கடைகளிலோ (அ) பம்பிங் ஸ்டேஷனுக்கோ போய் சேராமல் தடுப்பதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்து மழைத்தண்ணீர் செல்லும் வடிகாலில் மழைநீர் கால்வாய் நிலத்தடி நீர் ஆதாரத்தை அதிகரிக்கும் வகையில் (Rain Water Harvesting) மட்டும் நகராட்சிபொறியாளரால் அங்கீகரிக்கப்படும் இடத்தில் தடங்கலின்றி செல்லுமாறு அமைத்து பாதுகாக்கப்படவேண்டும். மேலும் புதியதாக வீட்டு இணைப்பு கொடுப்பதற்கு முன் மழைநீர் சேகரிக்கும் அமைப்பு அவ்வீட்டில் கட்டாயமாக அமைந்திருக்கவேண்டும். | 2.The rain water from the terraces (roof) of the houses and their surroundings and open spaces should not be let out to each the drainage gutters or pumping station. To facilitate rain water harvesting and improve ground water resources. The rain water should flow to a particular place without any block as approved by the Municipality Engineer. A rain water harvesting structure is mandatory provision be to get the Underground Drainage System connection. |
| 3.அக்கட்டிடத்தின் கூரைகளிலிருந்து விழும் நீரை வெளித்தள்ள அதற்கான வடிகாலில் மழைநீர் கால்வாயில் விழுந்து செல்லுமாறு வேண்டிய குழாய்கள் வாய்க்கால்கள் முதலிய வசதிகளை வீட்டின் உரிமையாளர் (அ) வாடகை இருப்போர் செய்ய வேண்டும். | 3.The Owner of the house or the tenants should provide such facilities that are necessary for the rain water discharged from the top of the building with proper drain pipe and canals |
| 4.அவ்வாறு கட்டப்படும் வடி குழாய்களில் (அ)வாய்க்கால்களில் மலநீர் கழிக்கும் இடங்கள் குளிக்கும் அறைகள் கை கால் கழுவும் இடங்கள் முதலியவைகளிலிருந்து வெளியாகும் திட (அ) திரவப் பொருள்கள் விழுமாறு அமைக்கக்கூடாது. | 4.It should be clearly noticed that solid or liquids of faces and gray water from wash basins or bathrooms should not mix with the rain water harvest process. |
| 5.புதை வடிகால் குழாய்களை மண்ணிற்கு கீழ் தண்ணீர் ஊற்று தோன்றும் பகுதிகளில் அமைக்க வேண்டியிருந்தால் சிமெண்ட் கான்கிரீட் சுற்றிலும் போட்டு அமைக்க வேண்டும். நகராட்சிபணியாளரால் | 5.If such pipes are to be provided in wet places where water is likely to ooze. Further the rain water harvesting process needs to be done with cement concrete structures. If such provisions |

| | |
|---|---|
| விரும்பப்படும் மற்ற இடங்களில் அக்குழாய்களை அமைக்க முற்படும் போது அவர் உத்தரவுப்படி சிமெண்ட் கான்கிரீட் போட்டு அதன் மேல் அக்குழாய்களை அமைத்தோ அவைகளை சுற்றிலும் சிமெண்ட் கான்கிரீட்டால் மூடியும் அமைக்க வேண்டும்.<br><br>அ. கழிப்பறைகளில் உள்ள மலக்கழிவு மற்றும் அதனுடன் கலந்துள்ள கழிவு நீர் (Black Water) ஆகியவற்றை தனியாகவும் குளியல் அறை, சமையல் அறை, இதர கழிவு நீர் (Grey Water) ஆகியவற்றை தனியாகவும் பிரித்தெடுக்கும் வகையில் குழாய் இணைப்புகள் வீட்டு உட்பகுதியில் ஆய்வு தொட்டி (Inspection Chamber) ல் இரண்டையும் சேர்க்க வேண்டும். பின்னர் அந்த ஆய்வு தொட்டி Inspection Chamber) ல் இருந்து பாதாள சாக்கடை ஆய்வு குழியுடன் குழாய் மூலம் இணைப்பதற்கு ஏற்றவாறு தக்க கட்டமைப்பு வசதிகள் அமைக்க வேண்டும் . | are to be laid in other places recommended by the Municipal Authority they should be built over the cement concrete or they should be covered by the cement concrete slab. |
| <u>**6. கற்களின் கலவை (அ) இரும்பாலான குழாய்களைக் கொண்டு சாக்கடை அமைத்தல்.**</u><br><br>சாக்கடை அமைக்க முற்படுபவர் போதிய விட்ட அளவில் உள்ள குழாய்கள் அமைக்க வேண்டும். அந்த சாக்கடைக் குழாய்களின் உள்விட்டம் 100 மி.மீட்டருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும் நகராட்சி பொறியாளரால் அங்கீகரிக்கப்படும் விட்ட அளவிற்கு மேலாகவோ அத்தண்ணீர் செல்வதற்கான அளவிற்கு மேலாகவோ இருத்தல் வேண்டும்.<br><br>**(அ) சாக்கடையின் அளவு**<br><br>அவ்வித சாக்கடைகளை நகராட்சி பொறியாளரால் அங்கீகரிக்கப்படும் வாட்டத்துடன் கீழ்க்கண்ட வாட்டங்களில் இருத்தல் வேண்டும். 100 மி.மீ உள் விட்டமுள்ள சாக்கடைகளுக்கு 40க்கு 1ம், 150மி.மீ உள்விட்டமுள்ள சாக்கடைகளுக்கு 80க்கு 1ம் வாட்டம் இருக்க வேண்டும்.<br><br>(ஆ) ஒவ்வொரு சாக்கடையும் ஒரே நேர்முகமாக அமைத்து அவற்றிற்கு சரியான வாட்டங்களுடன் கூடிய மட்டிலும் குறைந்த வளைவுகளுடனும் திருப்பங்களில் தகுந்த வளைவு குழாய் வாய்க்கால் முதலியவைகளையும் அமைக்க வேண்டும்.<br><br>(இ) முடிந்த வரையில் வளைவுகளையும் குழாய் சந்திப்புகளையும் ஒன்று சேர்ந்து அவைகளை பரிசீலனை செய்வதற்கான பார்வை குழிகள் (Man Holes) ஆள்இறங்கி பார்ப்பதற்கு ஏற்ப பார்வை குழிகள் கட்டப்பட வேண்டும்.<br><br>(ஈ) அடுக்குமாடி வீடுகளுக்கு இணைப்பு வழங்கும்போது கீழ்க்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்படும்.<br><br>4 கழிப்பறைகள் - குழாய் அளவு 100 மி.மீ | 6.Construction of drainage system with stone water or C.I Pipes. Those who lay drainages should use pipes of prescribed diameters. The inner diameter should not be less than 100 mm. The diameter limit should be above the approved one by the Municipal Engineer or above the level of the water discharged.<br><br>a).The specifications for the drainage gutter:-<br><br>The drainage should be in the pattern approved by the Municipal Engineer as detailed below<br><br>Drainage of 100 mm inner diameter – 40:1<br><br>150 mm inner diameter – 80:1<br><br>If it is lesser than the prescribed norms approval of the Municipal Engineer is necessary<br><br>b)The drainage should be straight with a minimum number of bends in its course, suitable bend pipes and canals<br><br>c)Necessary inspection chamber should be provided at the points of junction and bends to enable for future inspection in the event of dry block or failure in the system<br><br>d)The following rules will be observed for granting connection for flats:-<br><br>1. Up to four latrines – pipe 100 mm<br>2. Above 4-8 latrines – pipe 150 mm<br>3. Above 8 latrines – pipe 200mm |

<table>
<tr>
<td>4க்கு மேல் 8 வரை- குழாய் அளவு 150 மி.மீ<br><br>8க்கு மேல்- குழாய் அளவு 200 மி.மீ<br><br>இதற்கு மேல் குடியிருப்புகளின் எண்ணிக்கை கூடும்பொழுது பொறியாளா் வடிவமைத்துக் கொடுக்கும் அளவில் கூடுதல் இணைப்புகள் பதிக்க வேண்டும்.</td>
<td>In the event of increase in residence the norms prescribed by the Municipal Engineer should be followed strictly<br><br>e)For every residential flat occupied by owners the deposit, service charges and property tax must be collected separately from each and every owner of the apartments.</td>
</tr>
<tr>
<td>7. கழிவுநீா் வரும் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கு குழிகள் முதலியன வட்டமாகவும் வளவளப்பாகவும் தண்ணீா் கசியாத துருப்பிடிக்காத இரும்பு குழாய்களாகவோ (CI Pipes) அல்லது சுடுமண் குழாய்களாகவோ (Stone- Water Pipes) (அ) சிமெண்ட் கலவைகளாலான குழாய்களாகவோ இருத்தல் வேண்டும் மற்றும் தண்ணீா் புகாதபடி உள் மற்றும் வெளிப்புறங்கள் சிமெண்ட்டினால் பூச வேண்டும் அல்லது குழாய்கள் சரியான இணைப்புகள் மூலம் சேர்க்க வேண்டும்.</td>
<td>7.Drainage pipe connecting manhole should be round in shape, smooth surface, leak proof, rust proof, C.I Pipes, Stoneware pipes or concrete pipes. The pipes should be plastered with cement mortar both inside and outside of the joints should be light and strong to prevent any inflow or outflow of water.</td>
</tr>
<tr>
<td>8. மேற்குறிப்பிட்ட குழாய்களை கொண்டு அமைக்கப்படும் சாக்கடைகள் கீழ்க்காணும் விதத்தில் குழாய்களின் இணைப்பு கனம் முதலியன இருத்தல் வேண்டும்.<br><br>
<table>
<tr><th>உள் விட்டம்</th><th>குழாய்களின் குறைந்தபட்ச கனம்</th><th>இணைப்பு கட்டின் (Socket) குறைந்த பட்ச ஆழம்</th><th>சிமெண்டின் குறைந்தபட்ச பரிமானம்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td></tr>
<tr><td>100 மி.மீ</td><td>12 மி.மீ</td><td>50 மி.மீ</td><td>10 மி.மீ</td></tr>
<tr><td>150 மி.மீ</td><td>16 மி.மீ</td><td>57 மி.மீ</td><td>11 மி.மீ</td></tr>
<tr><td>250 மி.மீ</td><td>20 மி.மீ</td><td>70 மி.மீ</td><td>16 மி.மீ</td></tr>
</table>
<br>இணைப்பு குழாய்கள் போன்ற பிரத்தியேக வடிவ குழாய்கள் அவை பாங்கான உருவுடனும் வளைவுகளினால் அவைகள் சரியான வட்ட வடிவமாக இருத்தல் வேண்டும். மேற்படி சாக்கடை குழாய்கள் வார்ப்பு இரும்பு சுடுமண் குழாய் அல்லது பிவிசியால் செய்யப்பட்டவையாய் இருக்க வேண்டும்.</td>
<td>The specification for pipe connection laid as stated above as follows:-<br><br>
<table>
<tr><th>Inner diameter volume</th><th>Minimum gauge of pipes</th><th>Minimum depth of the socket</th><th>Minimum of cement</th></tr>
<tr><td>100mm</td><td>12mm</td><td>50mm</td><td>10mm</td></tr>
<tr><td>150mm</td><td>16mm</td><td>57mm</td><td>11mm</td></tr>
<tr><td>250mm</td><td>20mm</td><td>70mm</td><td>16mm</td></tr>
</table>
<br>Pipes like the connection pipes should in the proper from with proper curves forming perfect circular shape. These pipe should be of CI Pipes, stoneware or PVC pipes.</td>
</tr>
<tr>
<td>9.எல்லாவித குழாய் இணைப்பகளும் தேவையான அங்கீகரிக்கப்பட்ட உதிரி பாகங்கள் பொருத்தப்பட்டு நகராட்சி பொறியாளரால் அங்கீகரிக்கபடும் வகையில் சரியாக இருக்க வேண்டும். அவ்வாறு கற்களின் கலவைக்கொண்டு செய்யப்படும் குழாய்கள் உள்ள சாக்கடையை அமைத்தால் இக்குழாய்கள் ஒன்றோடு ஒன்று சரியாக சேர்க்கப்பட்டு ஓர் பாகம் மணலும்</td>
<td>9.All kind of pipes connections should be perfectly fixed of spare parts approved by the Municipal Engineer.<br><br>When the concrete pipes are used in the drainage system the pipe joints must be sealed, properly with cement sand mix of 1:1. In case of</td>
</tr>
</table>

| | |
|---|---|
| கலந்த கலவையால் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.<br><br>வார்ப்பிரும்புக் குழாய்கள் பொருந்திய சாக்கடைகள் அமைத்தால் அக்குழாய்களை இணைக்கும் போது அவ்விணைப்புகளில் 9.4 மில்லி மீட்டருக்கு குறையாமல் ஆழமும் காய்ச்சி உருக்கின ஈயத்தால் சரியாக இணைக்கப்பட வேண்டும். 100 மி.மீட்டர் குழாய்கள் இருப்பின் இடைவெளியானது 10மி.மீட்டர் அகலத்திற்கும் குறையாமல் இருக்க வேண்டும் | usage of CI Pipes, the joints must be sealed with melted lead to the depth of 9.4mm. If the pipe is 100mm dia, the gap between two pipe joint must be not less than 10mm |
| 10. பக்கவாட்டில் உள்ள பொருள்களுக்கு சேதம் நேராவண்ணம் தோண்டின இடத்தின் பக்கங்கள் சரியான முறையில் மரக்கட்டைகளால் தடுப்பு ஏற்படுத்த வேண்டும்.<br><br>அ) ஒவ்வொரு குழாயின் சரியான முறையில் நிலத்தில் உறுதியாக அமைக்கப்பட்டு தண்ணீர் ஊற்றி நன்றாக கெட்டிப்படுத்த வேண்டும். சாக்கடை குழாய்களின் போகும்பாதை கெட்டியான தரையில்லா இடங்களிலோ தண்ணீர் ஊறும் பாகங்களிலோ போட நேர்ந்தால் அவ்விடங்களில் நகராட்சி பொறியாளரால் நிர்ணயிக்கப்படும் அளவு போதிய கன அளவு உள்ள கான்கிரீட்டின் மேல் போட்டு குழாய்களைச் சுற்றியும் கான்கிரீட்டினால் மூடப்படவேண்டும்.<br><br>ஆ) அவ்வித ஒவ்வொரு சாக்கடையும் மேற்கூறிய வகையில் தண்ணீர் உட்புகாமல் இருக்கும் வண்ணம் அமைத்து அதை நகராட்சி பொறியாளரால் குறிப்பிடப்படும் அழுத்தம் தாங்கும் திறன் உள்ளதா என்பதை பரீசிலனை செய்து நகராட்சி பொறியாளரின் ஒப்புதல் பெறவேண்டும். | 10.There should be wooden barricade in the pit to avoid any damage to surrounding places.<br><br>a) Every pipe should be properly laid strong, further strengthened by pouring water. Where the soil is porous and wet drainage pipe should be laid on bed of cement concrete and plastered alround as prescribed by the Municipal Engineer.<br>b) The design of above said drainage should be arranged in such a way that there should not be any in flow of water and the pressure resistance capacity must be prescribed. It must be got approved by the Municipal Engineer. |
| 11.அமைக்கப்படும் சாக்கடைளுக்கு வசதிக்காக வைக்கப்படும் துளைகளைத் தவிர ஒவ்வொரு சாக்கடையின் உட்புறவாயிலிலும் 50மிமீ மட்டத்திற்கு குறையாத தண்ணீர் தேக்கி வைத்துக்கொள்ளும்படியான பொறியுடன் பொருத்தியதாக இருக்கவேண்டும் அவ்வாறு வைக்கப்படும் பொறிகள் (Trap) பெல்டிராப் (Bell Trap) ஆகவோ டிப் டிராப் (Dip Trap ) ஆகவோ இருத்தல்வேண்டும். | 11.In addition to the air-holes for providing an every drainage should have a trap inside with a capacity to hold water level up to 50mm. The trap may be either bell trap or dip trap |
| 12.நகராட்சி பொறியாளரால் அங்கீகரித்த அளவுகள் மற்றும் உறுதிப்பாடுடன் கூடிய எல்லா சாக்கடைகளின் பொறிகள் (அ) மூடிகள் போன்றவைகளையே தான் அமைக்க வேண்டும். 100 மி.மீட்டர் கனம் கான்கிரீட் தளத்தின் மேல்தான் ஒவ்வொரு பொறிகளையும் அமைத்து தண்ணீர் மட்ட 31 செ.மீட்டருக்கு குறைவாக உள்ள சல்லடை மூடிகள் (Grating) 2.5செ.மீட்டரும் அங்குள்ள நடைபாதைக்கு கீழாக இருக்குமாறு அமைக்க வேண்டும். நடைபாதையை அங்குள்ள சாக்கடையும் சல்லடை (Grating) பாதி அளவிற்கு போதுமான சாய்ந்த பரப்பாக இருக்குமாறு செய்ய வேண்டும். | 12.The trap or the covering lid should be of the same specification approved and confirm to standard by the Municipal Engineer. The trap should be built on 100mm concrete base with gratings of 2.5cm water level less than 31cm. It should be below the path level and the path should be built slanting to the level of the grating |
| 13.இவ்விதிகளின்படி மேற்கூறியவாறு அமைக்கும் அமைப்புகள் யாவும் அருகிலுள்ள வீதி (அ) | 13.There should be proper iron lids covering them to check the in flow of surface water at |

| | |
|---|---|
| தள பரப்பு வரை தண்ணீர் உட்புகாவண்ணம் மேலே தக்க இரும்பு மூடிகளால் மூடப்பட்டு இருக்கும்படி செய்யவேண்டும். | street level into the drainage system. |
| 14.வேறெவ்வித வழியிலும் சாக்கடை அமைக்க வழியில்லாமல் போனாலன்றி சாக்கடைகளை அக்கட்டிடத்திற்கு அடியில் அமைக்கக்கூடாது. அவ்வாறு ஒரு கட்டிடத்தின் கீழாக சாக்கடைகளை அமைக்க முயன்றால் கீழே கொடுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்.<br><br>(அ) சாக்கடை முழுவதும் அக்கட்டிடத்தின் கீழான ஒரே நேர்க்கோட்டில் இருக்குமாறு அமைக்க வேண்டும்.<br><br>(ஆ)அந்த சாக்கடை வார்ப்பு இரும்பு குழாய்களைக்கொண்டு ஈயத்தால் ஒன்று சேர்க்கப்பட்டோ (அ) கற்கலவை குழாய்களைக்கொண்டு 15 செ.மீட்டர்கள் கன அளவுக்கு கான்கிரீட்டால் ஒன்று சேர்க்கப்பட வேண்டும்.<br><br>(இ) கட்டிடத்தின் அடியில் செல்லும் சாக்கடையின் வாயில் ஒவ்வொன்றிலும் திறந்து பார்ப்பதற்குரிய அமைப்பு இருக்க வேண்டும். | 14.At no point the building drain should run under the building, in exceptional cases with following conditions:-<br><br>a) All drainage should be built in such a way as they are in a straight line.<br>b) The drainage pipe should be of CI Pipes connected with lead or concrete pipes. They should be connected to the extent of 15 cm with concrete<br>c) The drainage system under the building should have manhole arrangements to have an open check |
| 15.சாக்கடைகள் ஒரு சுவரின் கீழாகவோ (அ) அதனுள் நுழைந்தோ செல்ல வேண்டி இருப்பின் அதன் பாதுகாப்பிற்காக சுவரில் அதற்கு இணையாக ஒரு வளைவு செய்து தர நகராட்சி பொறியாளரால் குறிப்பிடும் வகையில் ஆர்.சி.சி கான்கிரீட் (அ) சாக்கடையை தாங்கும் அளவு இரும்பினால் பாதுகாக்குமாறு வளைவான பாகத்தை அமைக்க வேண்டும். அவ்வாறு அமைக்கும் வளைவால் சாக்கடைக்கு எக்காலத்திலும் யாதொரு இடையூறும் நேராவண்ணம் இருக்க வேண்டும்.<br><br>ஒரு சாக்கடையைச் சுற்றியோ அதன் மீதோ பிற்காலத்தில் சுவர் எழுப்பப்பட வேண்டியிருந்தால் அந்த சாக்கடைக்கு மேற்சொன்ன முறையில் பாதுகாப்பு அமைக்க வேண்டும். | 15.When a drainage has to pass through or under a wall, a circular arch of RCC concrete or of iron strong enough to bear the weight of the drainage need to be built to safe guard the circular portion. But at no time should the arch binder the drainage. When a wall needs to be built over or around the drainage. Proper protection has to be made as narrated above. |
| <u>**16.சாக்கடைகளுக்கு காற்று வசதி:**</u><br><br>ஒரு பெரும் சாக்கடையிலோ (அ) கிளை சாக்கடையின் தலைப்பிலோ நகராட்சி பொறியாளரால் குறிப்பிடும் இடங்களில் பொறியில்லாத திறப்புகளை அமைக்க வேண்டும். இம்மாதிரியான திறப்புகளை பொறிகளோ (அ) வேறு யாதொரு விதமான அமைப்புகளோ -இல்லாமல் காற்று உட்புகுவதற்கு வசதியாக இருத்தல் வேண்டும்.<br><br>ஒவ்வொரு திறப்புகளும் சாக்கடையின் தலைப்பிலிருந்து செங்குத்தாக ஒரு குழாய் மூலமாக இணைக்கப்பட வேண்டும்.<br><br>அவ்வாறு இணைக்கப்படும் இணைப்புகளும் கீழ்க்காணும் வண்ணம் அமைத்தல் வேண்டும்.<br><br>அ) அவ்விணைப்பு யாதொரு கட்டிடத்தின் ஜன்னலிலிருந்தோ அக்கட்டிடத்தின் | 16.Air facilities to the drainage:- For larger drainages or at the entrance of the tributary drainages trapless opening been to provided. These opening should have free access to air without any trap or other such provisions. Every opening should be connected with the top of the drainage through a horizontal pipe. Such connections should be built as detailed below:-<br><br>a) The connection should not end 6 meters below or above a window or entrance of any building.<br>b) The connection that falls on the wall supporting the room should necessary be above 60cm or more<br>c) Such connection should in no way be detrimental to the interests of the residents. |

| | |
|---|---|
| வாயில்களிலிருந்தோ மேல்பக்கமாகவோ கீழ்பக்கமாகவோ 6மீட்டர் தொலைவிற்குள் முடிந்துவிடக்கூடாது.<br><br>ஆ) கட்டிடத்தின் கூரைகளைத் தாங்கி நிற்கும் ஒரு சுவர் மேல் அவ்விணைப்பு பொருத்தப்படுவதாய் இருந்தால் அக்கூரைகளுக்கு மேலே 60 செ.மீட்டர்கள் அதிக உயரத்திற்கு குறைவில்லாது இருக்க வேண்டும்.<br><br>இ)அடுத்து குடியிருப்போருக்கு யாதொரு இடைஞ்சலும் கொடுத்திடா வண்ணம் இவ்விணைப்பு அமைக்கப்பட வேண்டும். | |
| 17.மேற்கூறிய விதிகளின்படி அமைப்பதுடன் பொறியாளர் கூறும் இடங்களில் இணைப்புகளைக் கத்தரிக்கும் பொறிகள் அமைத்து அவைகளுக்கு அருகாமையில் கட்டிடங்கள் இருக்கும் பாகத்தில் பொறிகளற்ற ஒரு துளை இருக்குமாறு அமைக்க வேண்டும். மேற்சொன்ன திறப்பு பக்கத்தில் உள்ள தளத்திற்கு மேலாகவும் அருகில் இருக்க வேண்டியதுடன் சாக்கடைக்குழாய் மூலமாகவோ தொட்டிகள் மூலமாகவோ சேருமாறு அமைத்தல் வேண்டும். | 17.There should be hole without traps near the buildings as per the above rules at places where the engineer directs the connections to be made. The opening should be above but near the surface with connections for drainage pipes and tanks. |
| 18.மேற்குறிப்பிட்ட வகையில் அமைக்கப்படும் ஒவ்வொரு திறப்புக்கும் கீழேயுள்ள குழாய்களுக்கோ சாக்கடைக்கோ கெடுதி நேரா வண்ணம் சரியாக பொருத்துமளவில் கம்பிகளால் இணைக்கப்பட்ட கிராதிகளையோ (Grating) (அ) வேறு பொருள்களைக் கொண்டு செய்யப்பட்ட (அ) குழாய் குறுக்களவுக்கு தக்கவாறு காற்று தாராளமாக நுழையுமாறும் உள்ளிருக்கும் குழாயின் பரப்பளவிற்கு குறைவாக இல்லாமல் துளைகளுடன் இருக்க வேண்டும். | 18.The gratings or ones made of other substances should be in relation to the diameter of the pipes enable free flow or air, without being smaller than the inner surface of the pipe, but with adequate holes. |
| 19. வேறு எவ்வித வழியும் இல்லாமல் போனாலன்றி மேற்கூறிய 16வது துணை விதி முறையில் அமைக்கப்படும் வைப்புகளில் குழாய்களை வளைவாகவோ கோண வடிவமாகவோ அமைக்கக் கூடாது.<br><br>முன்னர் கூறப்பட்ட வகையில் அமைக்கப்படும் குழாய்கள் உள்விட்டம் 100 மி.மீட்டருக்கு குறைவாக இல்லாமல் இந்தியன் ஸ்டேண்டர்டு ஸ்பெசிபிகேசனில் சொல்லி இருக்கும் வண்ணம் வார்ப்பு இரும்பால் செய்யப்பட்ட கூடும் முனை உள்ள குழாய்கள் காற்றுப்புகும் குழாய்களைக்குறித்து இருக்குமாறு அமைக்க வேண்டும். | 19.Unless there is no other way, the pipes position should not be circular or angular but should strictly adhere to sub-rule 17. The pipes as stated earlier should have an inner diameter of not less than 100mm and the cover and edge should have been made of CI iron as per Indian Standard Specifications and they should be open to the provisions of air. |
| 20.இடம் குறுக்கு வெட்டுப்பரப்பு உயரம் கட்டப்பட்ட மாதிரி முன்பே முதலிய எல்லா வகையிலும் 17ம் விதி வகையில் எல்லாவித பொருத்தங்களும் உடையதாக உள்ள தண்ணீர் தொட்டியின் மண் குழாய்கள் இருந்தால் அவைகள் மேலே கண்ட 19 விதிகளின்படி திறப்புகளையும் உடையனவாக இருப்பதாக கருதப்படும். | 20.It will be considered that if the stone water pipe of the water tank or in every respect of their location cross section area. Height and building pattern as per rule 18 they are supposed to have openings as per rule 20. |
| **<u>21.கழிவுப்பொருளை வெளித்தள்ளும் குழாய்கள்</u>** | 21.Pipes discharging the black and gray water |

| | |
|---|---|
| குளிக்கும் அறையில் மல அறை முதலிய இடங்களிலிருந்து வெளித் தள்ளப்படும் கழிவுப் பொருள்களை கொண்டு செல்வதற்காக ஏற்படுத்தப்படும் குழாய்கள் யாவும் 40 முதல் 50 மி.மீ உள் விட்டம் உடையதாகவும் ஈயத்தாலோ (அ) வார்ப்பு இரும்பாலோ செய்யப்பட்டதாகவும் அக்கழிவுப் பொருள்கள் தள்ளப்படும் இடங்களாகிய குளிக்கும் அறை முதலிய இடங்களுக்கு சற்று கீழாகவும் தக்க சைபன் பொறி அமைக்கபடும். பொறிகளைத் தேவைக்குறிய காலங்களில் திறந்து சுத்தம் செய்வதற்கு அனுகூலமாயிருக்கும் வகையிலும் வெளிக்காற்று உட்புகாத வண்ணம் அமைக்கப்பட வேண்டும். | should have an inner diameter of 40-50mm and made of lead or castiron. They should be placed just below the level of the toilet with siphon arrangements. It should also be possible to open them in times of need and clean. Further no outer air should enter into it. |
| 22.அவ்வாறாக கட்டப்படும் ஒவ்வொரு குழாயும் கழிவுநீரைக் கொண்டு செல்வதற்காக கட்டிடத்தின் வெளிச்சுவற்றிற்குள்ளாக எடுத்துச் செல்லப்பட்டு திறந்த வெளியிலுள்ள ஒரு சாக்கடைக்கோ (அ) சாக்கடைக்கு செல்லும் கால்வாய்க்கோ சென்று முடியுமாறு முடிந்தவரையில் குறைந்த நீளமுடையதாக சேருமாறு செய்ய வேண்டும். | 22.Every discharge pipe should be laid concealed along the outer wall and end at the open air drainage of the canal. It should as far as possible be of short in length |
| 23. மேற்கூறும் வகையில் அமைக்கப்படும் குழாய்கள் ஒவ்வொன்றும் பொறியாளர் விரும்பும் வகையில் சுவருக்குள்ளாக ஒன்றாகப் பொருத்தப்படவேண்டும். அவ்வாறு நகராட்சி பொறியாளர் குறிப்பிடும் வகையில் பொருத்தமாக அமைக்கப்படும் குழாய்கள் வார்ப்பு இரும்பால் செய்யப்பட்டவையானால் அவைகளுக்கு ஆங்காங்கே பிடிக்கும் பட்டைகள் (Holder Bats) (அ) பிடிகளைக்கொண்டு தக்கப்படி பொருத்தப்பட வேண்டும். | 23.Every such pipe as stated above should be fixed concealed as desired by the Engineer, if the pipes are of cast iron they should have holder bats or handles suitably fixed at proper points |
| 24. தண்ணீர் தொட்டி கழிவுநீர் அறை இவற்றின் அமைப்புகளும் கருவிகளும் திட திரவமாக வெளித்தள்ளப்படும் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் இடங்களாகிய பாத்திரம், சிறுநீர் இறக்குமிடம் பீங்கான் பாத்திரம் முதலியயாவும் தனித்தனியாக தண்ணீர் உள்ள ஜாடி ஒவ்வொன்றில் பொருத்தியிருக்க வேண்டும். அவ்வாறுள்ள சிறுநீர் கழிக்கும் அறைகளின் பாகங்களில் ஒன்று வெளிப்புற சுவராக இருக்குமாறு அமைக்க வேண்டும். சாதாரணமாக வீட்டிலுள்ளோர் புழங்கும் அறையிலிருந்தோ ஏதாவது உணவு பொருள்கள் (அ) மற்ற பொருள்கள் உண்டாகும் இடத்திற்கு அருகாமையிலோ தொழிற்சாலைக்கென அமைக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்தோ நேரடியாகப் போகும்படியாக சிறுநீர் கழிக்கும் அறையோ (அ) மல அறைகளோ அமைக்கக்கூடாது. சாதாரணமாக திறந்த வெளிகளின்றும் எளிதில் அவற்றுள் நுழையுமாறு அவை அமைக்கப்பட வேண்டும். | 24.The water tank, the drainage cell, their accessories of operation, the basins for black or gray water urinal and porcelain should all have connection with separate tubes of water. A side of the urinal should be the outer wall. No Urinal or latrine should have access through a kitchen storeroom or rooms in use or machine rooms of factories. Normally they should have access through an open area. |
| 25. அவ்விதமான சிறுநீர் கழிக்கும் அறையோ (அ) மல அறையோ கட்டுவதாய் இருந்தால் அதன் குறைந்த உள்ளளவு 125 செ.மீ X 85 செ.மீ இருக்கவேண்டும் மற்றும் அது வீட்டிலுள்ள குடியிருக்கும் அறைக்கோ அல்லது தொழிற்சாலைக்கென அமைக்கப்பட்ட இடம் போன்றோ உள்ளவைகளுக்கு அண்மையில் அமைக்கப்படுமாயின் | 25.Such urinal or latrine should have 125cm x 85cm as their minimum inner scale specifications. If they are located near the residential room of the house or machine rooms of a factory they should have a complete concealing wall or bricks and jelly from the top to the bottom. Such urinal or latrines should be built of smooth but with |

| | |
|---|---|
| அவை மறைப்பதற்காக அடித்தளத்திலிருந்து (கட்டிடத்தின்) மேல்கூரை வரை முழு உயரத்திற்கு செங்கல் கருங்கல் இவைகளாலான சுவரால் மறைக்கப்பட வேண்டும். இவ்விதம் சிறுநீர் கழிக்கும் அறையோ அல்லது மல கழிப்பறையோ அமைக்கப்படுவதாயிருந்தால் அது வழவழப்பான உறுதியான பொருளினால் செய்யப்பட்டு தண்ணீர் உட்புகாத தரைகளில் செய்யப்பட்டு உயரத்திலிருந்தால் 30 செ.மீக்கு 13 மி.மீ வாட்டமும் வெளியில் 0.05 மி.மீ விழுமிடத்தில் சேருமாறு அமைக்க வேண்டும். மேற்கூறிய சிறுநீர் கழிக்கும் அறை (அ) மல அறைகளின் தரையானது வெளிப்புறத்திலுள்ள தரையிலிருந்து 15செ.மீ அளவு உயரத்தில் உள்ளதாக இருக்க வேண்டும். அவ்வித மல அறைகளுக்கும் (அ) சிறுநீர் கழிக்கும் அறைகளுக்கும் தகுந்த அடைப்பான்களும் கதவுகளும் வைக்க வேண்டும். | strong materials. The floor should be wet free from any water inflow. If they are built on a higher level they should have 13mm to 30cm and flow near at a distance of 0.05mm. The floor level of any urinal or latrine should be 15cm above the outer floor level. The urinals and the latrines should have doors locking facilities. |
| 26. மேற்சொன்ன சிறுநீர் கழிக்கும் அறை (அ) மலை அறை போன்றவை இருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் ஒன்றின் குறைந்தது 1900 சதுர செ.மீட்டர்கள் பரப்புள்ள ஒரு ஜன்னல் (அ)திறப்பு இருக்க வேண்டும். காற்று உட்புகுவதற்கென வெளிப்புறச்சுவரில் தரைக்கு அருகாமையில் 120 ச.செ.மீ பரப்புக்கு குறையாத துளைகளும் உயர்ந்த பாகத்தில் 460 சதுர செ.மீ. அளவுள்ள துளையும் இருக்க வேண்டும். | 26.There should be a window or an opening of 1900 Sq.cm on one of the walls of the urinal and latrine. Air hole of 120 Sq.cm near the floor of 460 Sq.cm at higher levels should be provided or free air flow. |
| 27. 12லிட்டர் கொள்ளளவுக்கு குறையாமலும் நகராட்சி பொறியாளர் அனுமதித்தால் 15 லிட்டர் கொள்ளளவுக்கு மேற்படாத தண்ணீர் வீணாகாத மாதிரி தொட்டி ஒன்றை மேற்சொன்ன சிறுநீர் கழிக்கும் அறையை (அ) மல அறையை கழுவும் பொருட்டு மாத்திரம் உபயோகப்படுத்தும்படியும் மற்றும் குடிதண்ணீர் கொண்டு செல்லும் வேறு தொட்டியுடன் (அ) தண்ணீர் வழங்கும் குழாய் உடன் இணைக்கப்படாமலும் மற்றும் இத்தொட்டின் அடித்தளத்திலிருந்து தண்ணீர் விழும் இடத்திலிருந்து குறைந்தது 1.5 மி.மீ உயரத்திற்குக் குறையாமல் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும்.<br><br>ஒவ்வொரு தொட்டியும் தண்ணீர் வழங்கும் குழாயிற்கு தக்க உருண்டை வடிவில் ஒரு அடைப்பானும் அதிகமாக தண்ணீர் நிரம்பினால் வெளியே திறந்த வெளியில் நன்றாக தெரியும்படியான இடத்தில் வந்து விழும்படியான வடிகுழாயும் உடையனவாயிருக்க வேண்டும். ஆனால் இவ்வாறு வழியும் தண்ணீரானது நேரடியாக ஒரு சாக்கடையில் விழக்கூடாது. | 27.Solely to clean the urinals or the latrines a twelve litre tank or if permitted by the Municipal Engineer a fifteen litre tank may be built there without room for water wastes. The tanks or its pipe should have no connection with drinking or other normal use water provision. The tank should be 1.5 metre above the floor level where water is likely to fall.<br><br>Every tank should have a circular shaped pipe with control wheel. Any overflow of water should be able to be watched from outside and the discharge pipe should facilitate it. But no water should directly flow into the drainage. |
| 28. நகராட்சி ஆணையர் அவர்களால் எழுத்து மூலமாக ஆணை பெற்றாலொழிய தானாக வேலை செய்யும் தண்ணீரை வெளித்தள்ளும் அமைப்புகளை பொருத்தக்கூடாது. இவ்வாறு ஆணை பெற்றாலும் நகராட்சி பொறியாளர் அவ்வனுமதி சீட்டையும் உபயோகப்படுத்தப்படும் அமைப்புகளின் விவரங்களையும் இவ்வமைப்புகளைப் படங்கள் மூலமாகவும் அவ்வமைப்புகள் எப்பொருள்களால் செய்யப்பட்டன என்பதையும் விளக்கமாக எடுத்து | 28.Under no circumstances no automatic water discharge arrangements can be made unless a written permission is obtained from the Municipal Commissioner. In addition to the permission from the commissioner, permission has to be got from the Municipal Commissioner for the plan of the construction informing him the details of the construction with the materials to be used. The |

| | |
|---|---|
| எழுதி அவரது ஆணையைப் பெற வேண்டும். நகராட்சி பொறியாளர் கூறும் வகையில் அவ்வமைப்பை திருத்தி அமைக்கவும் வேண்டும் | plan needs to be modified as directed by the Municipal Engineer. |
| 29. அவ்வித கழிவு நீர்த்தொட்டியுடனும் மல அறை சிறுநீர் கழிக்கும் தொட்டி முதலிய வகைகளிலிருக்கும் தட்டு ஜாடி முதலியவைகளுடன் இணைக்கும் குழாய் எந்த இடத்திலும் குறைந்தது 32 மி.மீ அளவு உள்விட்டம் உடையதாகவும் இக்குழாய் எவ்வளவு செங்குத்தாய் இருக்க முடியுமோ அவ்வளவு செங்குத்தாகவும் அமையவேண்டும். | 29.The pipes connecting the basins of the discharged water and water from urinal or latrine with lids and joints should have an inner minimum diameter of not less than 32mm in all places and should be horizontal to the maximum extent possible. |
| 30.சிறுநீர் கழிக்கும் தொட்டி (அ) மல அறை போன்றவைகட்கு நகராட்சி பொறியாளரால் அங்கீகரிக்கப்பட்டது போன்ற கருவிகளால் அவைகளுக்கு ஏற்ற முறையில் அமைத்தல் வேண்டும். அப்படிப்பட்ட கருவிகள் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள அமைப்புகளை உடையதாயிருக்க வேண்டும்<br><br>1. ஏற்ற கொள்ளளவு உருவம்- உருவத்தின் மாதிரி முதலியவற்றை உடைய ஒரு தக்க பாத்திரமாகவும்<br><br>(அ) போதிய அளவு தண்ணீரை தன்னுள் கொள்ளுமாறும்<br><br>(ஆ) திடப் பொருளாக அவ்வப்பொழுது வெளித்தள்ளப்படும் கழிவுப் பொருள்களை எளிதில் தானாகவே அப்பாத்திரத்தில் உள்ள தண்ணீரில் விழுமாறும் சிறுநீர் இருக்கும் தளம் கூடிய அளவு சிறியதாக இருக்குமாறு உள்ள அமைப்புடனும்<br><br>(இ) அக்கழிவு பொருட்களை எளிதில் சிறிதளவு தண்ணீரால் நன்றாக சுத்தம் செய்து வெளித் தள்ளுமாறும் இருக்க வேண்டும்<br><br>2. இவ்வமைப்புகளை அன்றி கழிவுப் பொருட்கள் அங்கேயே தங்கி இருக்குமாறு அதை வெளியே எடுத்து கழுவி தூய்மை செய்யுமாறு உள்ள பாத்திரங்களால் அமைக்கக்கூடாது. பிரத்தியேகமாக அனுமதிக்கப்பட்டால் மாத்திரம் அப்பாத்திரத்துடன் ஒன்றாகவும் இல்லாவிடில் அவைகள் சைபன் பொறியுடன் நேர்முகமாக இணைக்கப்பட்டு அவைகளுடன் இணைக்கப்பட்டுள்ள மட்குழாய்கள் சாக்கடைகளுக்கும் அவைகளுக்கு இடையில் தக்கபடி 51 மி.மீட்டருக்கு குறையாமல் தண்ணீர் எப்பொழுதும் நின்றிருக்குமாறும் இருக்க வேண்டும். வேறு வழியில்லாத பொழுது தவிர மற்ற பொழுது அவ்விடத்தில் உள்ள சைபன் பொறியின் வெளிவாய் எளிதில் பார்க்கும் வண்ணம் இருத்தல் வேண்டும்.<br><br>3. அவைகளுக்கு தண்ணீரை எளிதில் உட்செலுத்தி அங்குள்ள (அ) பொறி முதலியவற்றில் அப்பொழுது விழுந்திட்ட திரவ பொருட்கள் உடனே வெளித் தள்ள | 30.The basin accessories for the urinal basin or latrine used should be similar to ones approved by the Municipal Engineer. They should satisfy the following conditions.<br><br>1) The shape model and capacity of the container<br>a) It should contain enough water<br>b) The faces discharged in the basin should move down freely to the water on its own. The urinal basin should as far as possible be small.<br>c) It should be possible to have them clean completely with a little water.<br>2) The basins should not be of the type of remove it out and clean it. If permitted as a special case alone. They should be connected directly with siphon arrangements. There should be water upto the level of not less than 51 mm between the drainage and the stone water pipes. The outer mouth of the syphon should be except in extraordinary cases, visible to the viewers.<br>3) There should be provision to the flush the water in and discharge the water out<br>4) No has in tank or other provision should be covered with lids of wood or any other thing |

| | |
|---|---|
| தகுந்த ஒரு அமைப்பு இருக்க வேண்டும்.<br><br>4. யாதொரு பாத்திரத்தையோ தொட்டி போன்ற மற்ற கருவிகளைச்சுற்றி மரத்தால் (அ) வேறு பொருள்களால் செய்யப்பட்ட மூடிகளால் பொருத்தக் கூடாது. | |
| **<u>31. கழிவுநீா் குழாய்கள்</u>**<br><br>இயன்ற வரையில் தண்ணீா் திட திரவக் கழிவுப் பொருட்கள் முதலியவற்றை சாக்கடைக்கு கொண்டு செல்லுமாறு அமைக்கப்பட்டுள்ள கழிவுநீா்த் தலைக்குழாய்கள்யாவையும் கட்டிடத்திற்கு வெளிப்புறம் இருக்குமாறு அமைக்க வேண்டும். இவை வாா்ப்பு இரும்பாலோ (அ) வாா்ப்பு ஈயத்தாலோ செய்யப்பட்டதாயிருக்க வேண்டும். கட்டிடத்தின் உட்புறமாகவோ அக்குழாய்கள் அமைக்கப்பட வேண்டுமென அவசியம் ஏற்படுமாயின் அவ்வாறான குழாய்கள் உருக்கிய ஈயத்தால் ஆக்கப்பட்டு எளிதில் கண்டுபிடிக்கக்கூடியதாகவும் வெளியில் தெரியும்படியான இணைப்புகளுடனும் அமைக்கப்பட வேண்டும். ஈயக்குழாய்கள் உபயோகிக்கப்பட்டால் அவை உறுதியான ஈயத்தால் செய்யப்பட்டு 100 மி.மீ அளவில் உள்விட்டம் உடையதாகவும் ஒரே அளவு கனம் அக்குழாய் முழுவதும் இருக்குமாறும் 100 மி.மீ குழாயாய் இருந்தால் நீள அளவில் 1 மீட்டருக்கு குறைந்தது 11 கி.கி கனமும் 125 மி.மீ குழாயாக இருந்தால் நீள அளவில் 1 மீட்டருக்கு குறைந்தது 15 கி.கி கனமும் இருக்குமாறு இருத்தல் வேண்டும். வாா்ப்பு இரும்பால் குழாய்கள் செய்யப்படுமாயின் அவை இந்தியன் ஸ்டாண்டா்டு ஸ்பெசிபிகேசன்படி உள்ள முனை கூடு முதலியவற்றை உடைய குழாய்களைப்போன்று ஒத்திருக்க வேண்டும். | 31.Drainage Pipes:- The Primary pipe carrying solid and liquid discharges should be far outside the building as far as possible. They should have been made of cast iron or lead. If for some reason or other, they are to be laid inside the building they should be of melted lead, built with connections easily visible from outside. The lead used should be strong. The inner diameter should be uniformly 100mm through out weighing 11 kg per meter. If the diameter is 125mm the weight to be 15kg per meter. CI Pipes of the ends and the cover should satisfy the Indian Standard Specification. |
| 32. கழிவுநீா் குழாயின் அடித்தளம் கான்கிரீட் தளத்தில் போடப்பட்டு சுவருடன் உறுதியாகப் பொருத்தப்பட வேண்டும். வாா்ப்பு இரும்புக் குழாய்களாக இருப்பின் பிடிக்கும் மட்டைகள் அமைக்கப்பட்டு பொருத்தப்பட வேண்டும். நகராட்சிப் பொறியாளா் திருப்தியுறும் வகையில் இக்குழாய் சுவா்களில் தகுந்த அமைப்புகளுடன் பொருத்தப்படுமாயின் போதுமானதாகும். | 32.The base of the drainage pipe should be made of concrete and strongly connected. The CI pipes if used should have holder bats. It is enough these pipe should be connected with the proper provisions of the wall to the satisfaction of the Municipal Engineer. |
| 33.அக்கழிவு நீா் தலைக்குழாய்கள் கட்டிடத்தின் உள்ளேயாயினும் வெளியேயாயினும் இருப்பின் மழைத் தண்ணீருக்காகவோ (அ) வேறு இடம் முதலியவற்றிலிருந்து வெளித் தள்ளப்படும் கழிவுப் பொருள்களுக்காகவோ கட்டப்பட்டுள்ள குழாய்களுடன் இணையாதவாறு அமைக்கப்பட வேண்டும். அக்கழிவு நீா் தலைக்குழாய்களிலோ அக்கழிவு நீா் குழாய்களுக்கும் அவைகளுடன் இணைக்கப்பட்ட மற்ற சாக்கடை குழாய் முதலியவை இடையே யாதொரு பொறிகள் இல்லாமலும் இருக்க வேண்டும். | 33.If the head of the drainage pipes inside or outside should be away from the rain water pipes or other such pipes without contaminating them. There should be no traps between the heads of the drainage pipes and the outer drainage pipes. |
| 34. அக்கழிவு நீா் தலைக்குழாய் உருண்டைவடிவில் 50மி.மீ அளவிற்கு குறையாத விட்டம் உடையதாகும். உயரமாக (கட்டிடத்தில் உள் அல்லது வெளிப்புறம்) குழாயின் தொடா்பு எடுத்துச்செல்லப்பட்டு இயலாமல் போகும் இடங்களைத்தவிர மற்ற இடங்களில் 100மி.மீ | 34.The head of the drainage pipes should be of circular shape of not less than 50mm diameter. Except where it is impossible the inner or outer pipes running high in a building should have a diameter of not less than 100mm. They should be |

| | |
|---|---|
| அளவு விட்டத்திற்கு அக்குழாய் குறையாமலும் அவ்விடங்களில் வளைவாகவோ, கோணமாகவோ அமையாமலும் தகுந்த உயரத்திலும் தக்க இடத்திலும் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு உயரமாக கொண்டு செல்லப்படும் குழாய்களுக்கு இறுதியில் ஒரு திறப்பு அசுத்தமான காற்றை வெளித்தள்ளுவதற்கென்றே தக்க முறையில் அமைத்துவிட வேண்டும். அவ்வமைப்பு 16ம் விதியில் குறிப்பிட்டுள்ளபடி (அ, ஆ, இ) முதலிய பகுதிகளுக்கு ஒத்திருக்க வேண்டும். | sufficiently be in a higher position with no curved or angular structure. Such pipes taken to higher levels should have a suitable opening to discharge the impure air. They should be in accordance with the provisions of the rule 17a, b and c. |
| 35.கழிவு நீர்க்குழாய்கள் மற்ற நீரை வெளிப்படுத்தும் குழாய்கள் காற்று வசதிக்காக (அ) மற்றும் வேறு குழாய்கள் யாவும் மண்ணில் மேல் தளத்திற்கு உயரமாக அமைக்கப்படுமாயின் அவை யாவும் காற்று வெளிப் போகா வண்ணம் இருக்கிறதா என்பதை நகராட்சிப் பொறியர் (அ) அவரால் அதிகாரம் பெற்ற ஒரு அதிகாரியின் முன்னிலையில் அவர் சொல்லும் விதம் அக்குழாய்களுள் புகையை செலுத்தி அவை வெளிவராவண்ணம் குழாய்கள் இருக்கின்றனவா என்றும் சோதனை மூலம் காண்பிக்க வேண்டும் | 35.The drainage pipes and other pipes discharging water if built over higher terrace they should be air tight and should be got tested in the presence of the Municipal Engineer one authorized by him smoke be sent inside the pipe and got confirmed that or does not leak put any where |
| 36.சிறுநீர் பொறி அறைகளுக்குக் காற்று வசதி<br><br>சிறுநீர் அறை அமைக்கும் பொழுது அது எந்த கழிவுநீர் தலைக்குழாயுடன் இணைக்கப்படுகிறதோ அத்துடன் மற்றைய சிறுநீர் அறைக்குழாய்களும் இணைக்கப்பட்டிருந்தால் அவ்வித சிறுநீர் அறைப் பொறி ஒவ்வொன்றிலும் வெளிக்காற்று உட்புகுவதற்கு வசதியாக பொறி ஒன்று அமைத்துவிட வேண்டும். அவ்வமைப்புக்கு வெளியே அங்கு கழிவுநீர் தலைக்குழாய் மேல் நோக்கி சென்றுள்ள உயரத்திற்கு சரியாகவோ (அ) அக்குழாயிற்குள்ளாகவே இணைக்கப்படுகின்ற சிறுநீர் அறை எது அதிக உயரத்தில் உள்ளதோ அவ்வுயரத்திற்கு மேலாக இருக்கும்படி அமைக்க வேண்டும். அந்த விதத்தில் காற்று வசதிக்காக இருக்க வேண்டும். காற்று வசதிக்குழாயுடன் கழிவுநீர் குழாயும் (அ) பொறியும் சேர்க்கும் இணைப்பு குழாயில் தண்ணீர் செல்கின்ற வழிநோக்கி இருக்க வேண்டும். | 36.Ventilation to urinal trap:- When an urinal is built, If the pipes of the urinal are connected with the trap lines of the drainage every trap should have facilitate to let outer air in it should be placed higher at the top line (head pipe) or at the top of the urinal line pipe whichever is at a higher level to enable free flow of air. The line connecting the trap and air pipe should face the pipe line carrying the water. |
| 37.காற்று வசதிக்கென அமைக்கப்படும் அவ்வித குழாய் உருக்கு ஈயத்தாலோ (அ) உறுதியான வார்ப்பு இரும்பாலோ 26ம் விதியில் குறிப்பிட்டு உள்ளவாறு செய்யப்பட்டு 28ம் விதியில் குறிப்பிட்டுள்ளபடி பொருத்தப்பட்டு இருக்க வேண்டும்<br><br>ஒரு கட்டிடத்திற்கு உட்புறமாகவோ அவ்வாறான குழாயைப் பொருத்த வேண்டுமாயின் அது உருக்கு ஈயத்தால் செய்யப்பட்டிருந்தாலும் போதுமானது | 37.The air pipes should be of case lead or iron as specified in rule 26 and fixed as stated in rule 28. If the pipes are to be laid inside a building it is enough they made of lead |
| 38.ஒருவர் தனக்காகவோ (அ) பிறருக்காகவோ சாக்கடைகளைக் கட்ட முற்பட்டால் அந்த சாக்கடைகளுடன் மண்ணால் கட்டப்பட்ட சிறுநீர் அறை (அ) சாம்பல் போடும் குழியோ (அ) கசிவு பொருள்களுக்கான கொள்கலம் முதலியவைகளோ நேர்முகமாகவோ (அ) மறைமுகமாகவோ இணைக்கப்படுதல் கூடாது | 38.If one for himself or for others builds drainage it should never be connected with the urinal built of mud, ash or the container of the wastes |

| | |
|---|---|
| **<u>39.திறந்த சாக்கடைகள்:</u>**<br><br>ஒரு கட்டிடத்திற்குள் மழைத்தண்ணீர் (அ) கழிவுநீர் முதலியவைகளை வெளித் தள்ளுவதற்கென்று திறந்த ஒரு சாக்கடையை ஏற்கனவே அமைக்கப்படாமலிருப்பின் அக்கட்டிடத்திற்குட்புறம் எந்த இடத்திலும் மல நீர் வெளிச்செல்வதற்கு என புதியதாக திறந்த சாக்கடைகள் கட்ட அனுமதிக்கப்பட மாட்டாது<br><br>எங்கெங்கு ஒரு திறந்த சாக்கடை மூடு சாக்கடையுடன் சேர்க்கப்படாமலும் அந்த திறந்த சாக்கடை இணைக்கப்படும் இடங்களுக்கு சற்று மேலாக திறந்த சாக்கடையின் இறுதியில் ஒரு பொறி அமைக்க வேண்டும். மழைத்தண்ணீர் முதலியன சாக்கடையுடன் சேராமல் தடுக்க அவசியமான அவ்வுயரத்தில் தடைகள் போட்டு தடுத்திருக்க வேண்டும். நகராட்சி பொறியாளர் குறிப்பிடும் வகையிலும் அவ்வித சாக்கடைகள் குறிப்பிடும் பொருட்களாலும் தக்க முறையில் அமைக்கப்பட்டால் அது போதுமானது. | 39.Open drainage:- If there is already an open drainage for the discharge of rain water or other discharged water, no permission will be granted for building a fresh open drainage for black water |
| 40.வீட்டு சாக்கடை ஒவ்வொன்றிற்கும் ஒரு பொறியும் வண்டல் வடிகட்டியும் நகராட்சி பொறியர் குறிப்பிடும் வகையில் இடங்களிலும் வைக்கப்பட வேண்டும் | 40.A trap and a sand filter should be provided for every drainage of the house at places specified by the Municipal Engineer as per the instructions |
| 41. ஒரு கட்டிடத்தின் சொந்தக்காரர் அக்கட்டிடத்திலுள்ள சாக்கடை சம்மந்தமாக எல்லா குழாய்கள் பொறிகள் முதலியவைகளை எளிதில் நகராட்சிப் பொறியாளர், அலுவலர் பார்வையிட எல்லாவித ஏற்பாடுகள் செய்து தர வேண்டும் | 41.The owner of the building should make every arrangements for the Municipal Engineer or his deputy to inspect all the aspects of the drainage pipes and traps. |
| 42. ஒருவர் ஒரு கட்டிடத்தில் புதியதாகவோ (அ) ஏற்கனவே உள்ள சாக்கடைகள் மாற்றி அமைக்க விரும்பினால் அது குறித்து நகராட்சி ஆணையருக்கு 30 நாட்களுக்கு முன்னதாகவே ரூ.50 செலுத்தி விண்ணப்ப படிவம் பெற்று உரிய வரைபடத்துடன் சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று பின்னர் பணிகள் தொடங்கப்பட வேண்டும் | 42.If one wants to build a drainage in a building or effect alterations for the existing ones he should apply with plan 30 days in advance in the prescribed form obtainable paying rupees fifty. |
| 43. மேலே சொல்லியுள்ள துணை விதியின்படி கொடுக்கப்படும் விண்ணப்பம் மற்றும் வரைபடத்தில் ஏதேனும் மாற்றம் பொறியாளரால் அறிவுறுத்தப்படின் அம்மாற்றங்களை உள்ளடக்கி வேறு வரைபடம் சமர்ப்பிக்க வேண்டும். ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தின் நகலை வேலை நடக்கும் இடங்களில் வைத்திருக்க வேண்டும் | 43.If the engineer suggests any alternation in the proposed plan a fresh plan should be prepared and got approved and such approved plan should be placed at the construction site |
| 44. அங்கீகாரம் பெற்ற பின் சாலைகள் தெருக்களில் இறுதியாக இணைக்கப்பட வேண்டிய சாக்கடை முதலியவைகளில் செய்ய வேண்டிய வேலைகளைத் தவிர்த்து மற்ற வேலைகள் யாவையும் விண்ணப்பதாரர் செய்யலாம். நகராட்சிப் பொறியாளரால் அங்கீகாரம் பெற்ற மூன்று தினங்களுக்குள் வேலை துவக்கப்பட வேண்டும் | 44.The work should commence within three days after the approval is obtained from the Municipal Engineer. After the permission is obtained, except for the final completion at the road end all other work can be finished by the applicant |
| 45. நகராட்சி அலுவலர்களைத் தவிர வேறு எவரும் சாக்கடைகள் சம்மந்தப்பட்ட எந்த ஒரு பணியையும் நகராட்சி ஆணையர் அனுமதியின்றி செய்யக்கூடாது | 45.No one except the authorities of the Municipality should undertake drainage work without the prior permission of the Municipal Commissioner |

46.சாக்கடைகள் கட்டுபவர் சாக்கடைகளை மாற்றி அமைப்பவர் (அ) சாக்கடையை சார்ந்த யாதொரு வேலைகளையும் செய்யும் ஒவ்வொருவரும் திறந்த சாக்கடைகள் அவைகளின் அஸ்திவாரம் துணைக்கருவிகள் முதலியவைகளை ஏற்பாடு செய்வதற்கு முன்னர் நகராட்சி பொறியர்க்கு அவைகளைப்பற்றி எழுதி அவைகள் பரிசோதனைக்குத் தயாராக இருக்கின்றன என்றும் அவைகள் எந்த நாளைக்கு எத்தனை மணிக்கு மூடப்படும் என்பதையும் குறிப்பிட்டு எழுத்து மூலமாக ஓர் நகராட்சி எல்லைக்குள் இருக்கும் குடியிருப்பு, தங்கும் விடுதி, வியாபார நிறுவனங்களிலிருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் கழிவகங்களில் உபகரணங்கள் அமைத்தல் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் பெறுதல் ஆகியவற்றிற்கு வைப்புத் தொகை மற்றும் சேவை கட்டணம் (SERVICE CHARGE) கீழ்க்கண்டவாறு கட்டிடத்தின் கட்டுமானப்பரப்பளவு அடிப்படையில் செலுத்தப்பட வேண்டும்

**குடியிருப்புகளுக்கான ஒருமுறை வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர சேவைக்கட்டணம்**

| இட பரப்பளவு | வைப்பு தொகை ரூபாயில் | மாதாந்திர சேவைக்கட்டணம் ரூபாயில் |
|---|---|---|
| 500 சஅடிக்கும் குறைவானவை | 5000/- | 100/- |
| 501-1200 சஅடிக்கு உட்பட்டவை | 6000/- | 120/- |
| 1201-2400 சஅடிக்கு உட்பட்டவை | 7000/- | 150/- |
| 2401 சஅடிக்கு மேற்பட்டவைகள் | 8000/- | 175/- |
| தொழிற்சாலைகள் (Industrial) | 10000/- | 200/- |

திருமண மண்டபங்கள், திரையரங்குகள் வணிக நிறுவனங்கள் கல்வி மற்றும் இதர பயிற்சி நிறுவனங்கள் மருத்துவமனைகள், விடுதிகள் ஆகியவற்றிற்கு ஒருமுறை (One term) வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர சேவைக்கட்டணம்

| இட பரப்பளவு | வைப்பு தொகை ரூபாயில் | மாதாந்திர சேவைக்கட்டணம் ரூபாயில் |
|---|---|---|
| 500 சஅடிக்கும் குறைவானவை | 10000/- | 200 /- |
| 501-1200 சஅடிக்கு உட்பட்டவை | 12000/- | 240/- |
| 1201-2400 சஅடிக்கு | 14000/- | 300/- |

46.One who builds, effects alternation or attends to work related to it in a drainage should pay in advance the due fixed deposit and service charges as detailed below (Service of discharge of black and gray water):-

Fixed deposit and service charges for Domestic Connections

| Area in Sq.Ft | Fixed Deposit (Rs) | Monthly Service Charges (Rs) |
|---|---|---|
| up to 500 Sq.Ft | 5000/- | 100/- |
| 501 to 1200 Sq.Ft | 6000/- | 120/- |
| 1201 to 2400 Sq.Ft | 7000/- | 150/- |
| Above 2400 Sq.Ft | 8000/- | 175/- |
| Industrial | 10000/- | 200/- |

<table>
<tr>
<td>
<table>
<tr><td>உட்பட்டவை</td><td></td><td></td></tr>
<tr><td>2401 சதுஅடிக்கு மேற்பட்டவைகள்</td><td>16000/-</td><td>350/-</td></tr>
<tr><td>தொழிற்சாலைகள் (Industrial)</td><td>20000/-</td><td>400/-</td></tr>
</table>
<br>
அறிக்கை கொடுக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கப்படும் அறிக்கை அவ்வறிக்கையில் குறிப்பிடும் ஏழு நாட்களுக்கு முன்னதாக நகராட்சி அலுவலகத்தில் கொடுக்கப்பட வேண்டும்.
</td>
<td>
Fixed deposit and service charges for other than Domestic Connections
<table>
<tr><th>Area in Sq.Ft</th><th>Fixed Deposit (Rs)</th><th>Monthly Service Charges (Rs)</th></tr>
<tr><td>up to 500 Sq.Ft</td><td>10000/-</td><td>200/-</td></tr>
<tr><td>501 to 1200 Sq.Ft</td><td>12000/-</td><td>240/-</td></tr>
<tr><td>1201 to 2400 Sq.Ft</td><td>14000/-</td><td>300/-</td></tr>
<tr><td>Above 2400 Sq.Ft</td><td>16000/-</td><td>350/-</td></tr>
<tr><td>Industrial</td><td>20000/-</td><td>400/-</td></tr>
</table>
He should inform in writing the Municipal authorities before 7 day of the details of open drainage the foundation and other provisions and their readiness for inspection. He should also inform the date and time of the closure of the drainage work (for the quarters, rest houses or commercial agencies)
</td>
</tr>
<tr>
<td>47. நகராட்சி சாக்கடையுடன் இணைக்கப்பட வேண்டிய வீட்டு சாக்கடைகள் மற்றுமுள்ள அமைப்புகள் யாதொன்றையும் நகராட்சி பொறியாளரால் மேற்பார்வையிடப்பட்டு அவைகள் நகராட்சியின் சகல விதிகளுக்கும் தேவைக்கும் சரியாக இருக்கிறதென்று உறுதி கூறும் வரை நகராட்சி சாக்கடையுடன் இணைக்கக்கூடாது. எழுத்து மூலமாக அவ்வித அத்தாட்சியின் நகலுடன் விண்ணப்பம் வந்த பின்பு தான் நகராட்சியின் அனுமதி பெற்ற நகராட்சி அலுவலரால் அவ்வித இணைப்புகள் கொடுக்கப்படும். மேலும் வீட்டு கழிவு நீர் இணைப்பில் மாசடைந்த நீர் (POLLUTED WATER) செல்வதாக தெரிந்தாலோ அல்லது அதனால் ஏதாவது அடைப்பு ஏற்பட்டாலோ அந்த கழிவுநீர் இணைப்பு துண்டிக்கப்படும்</td>
<td>47.No, drainage pipes or other similar provisions should be connected with the municipal drainage unless and until they are inspected and certified to the effect that they are all in accordance with the rules and needs<br><br>of the municipality by the Municipal Engineer. Permission will be granted only one application for the connection supported by the copy of the order of approval. If it comes to the notice of the municipality that pollute water flows into the connection pipe or some thing causes obstruction to the drainage connection will be withdrawn</td>
</tr>
<tr>
<td>48.வீட்டு சாக்கடை முதலியவற்றை நகராட்சி சாக்கடையுடன் இணைக்க விரும்பும் நபர் அதற்கான செலவுகளுக்கான தொகையை நகராட்சியில் செலுத்த வேண்டும். அத்தொகை எக்காரணத்தைக் கொண்டும் திருப்பி வழங்கப்பட மாட்டாது. மேலும் குழாய் இணைப்பு கொடுக்க வரைபடமும் மதிப்பீடும் சமர்ப்பிக்க வேண்டும். மதிப்பீட்டில் 10 சதவீதம் (PERCENTAGE) மற்றும் மேற்பார்வை கட்டணமாக செலுத்தி உத்தரவு பெற்று பின்னர் பணிகள் துவக்கப்பட வேண்டும்.</td>
<td>48.One who is desirous of connection the drainage of his house with that of the municipality he should pay the expenses for it to the municipality. The amount so paid will under no circumstance be refunded. A plan and estimate should also be given to the municipality for effecting the pipe connection. A further amount of 10 percentage of the estimate should also be paid before the construction starts towards</td>
</tr>
</table>

| | |
|---|---|
| 1. வரைபடம் கீழ்க்கண்ட குறிப்புகளுடன் இருக்க வேண்டும்<br><br>அ) 2 மீட்டருக்கு 1 செ.மீ அளவுள்ளதாக இருக்க வேண்டும்.<br><br>ஆ) குறியீட்டு வரைபடம் (INDEX PLAN) 1:10 அளவுள்ளதாக வரைந்து அதில் புதியதாக நிர்ணயிக்கப்படும் சாக்கடைகள் ஆள் இறங்கு குழிகள் முதலியவைகள் சிகப்பு நிறத்திலும் ஏற்கனவே உள்ளவைகளை மற்றொரு நிறத்திலும் குறிப்பிட வேண்டும். மேலும் தெருவின் பெயர், வீட்டு எண் போன்றவற்றையும் குறிப்பிட வேண்டும்.<br><br>இ) புதியதாக வழங்கப்படவிருக்கும் இணைப்பின் குறுக்கு வெட்டு தோற்றம் குறிப்பிட வேண்டும்.<br><br>ஈ) மேலும் இணைப்பு கோரும் விண்ணப்பத்துடன் அக்கட்டிடத்தின் நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட வரைபடத்துடன் (APPROVED BUILDING PLAN) இணைத்து அனுப்ப வேண்டும். | supervisory charges.<br><br>1) the plan should contain the following:-<br>a) it should be of 1 cm for 2 cm size<br>b) An index plan of 1:10 should be drawn with the new drainage proposed and manhole marked in red and the existing ones marked in a different colour other than red. The correct address, the door number and the name of the street should also be furnished.<br>c) The cross diagram of the proposed connection should also be furnished<br>The approved building plan of the municipality also be enclosed with any application for drainage connection |
| **<u>49.அபராதங்கள்</u>**<br><br>மேலே கூறப்பட்ட விதிகளை மீறி நடப்பவர் கீழ்காணும் தண்டனைக்கு உள்ளாவார்<br><br>அ) ரூ.1000 வரையில் அபராதம் விதிக்கப்படும்<br><br>ஆ) நகராட்சி அலுவலரிடமிருந்து அவ்விதம் மீறி நடக்கும் செய்கையை நிறுத்துமாறு அறிக்கை வந்த பின்பும் அதை தொடர்ந்து விதிகளை மீறினால் நாளொன்றுக்கு ரூ.100 வரையில் கூடுதல் அபராதத்திற்குள்ளாவார்கள்.<br><br>மேலே கூறப்பட்ட விதிகளுக்கு மாறாக யாதொரு வேலைகளையும் துவக்க முற்பட்டால் அவ்வித வேலையை யார் செய்கிறாரோ யாருக்காக வேலை செய்யப்படுகிறதோ அவருக்காக நகராட்சி ஆணையர் எழுத்து மூலமாக அறிக்கை கொடுத்து அவ்வமைப்புகளை எடுத்துவிடவோ, மாற்றியமைக்கவோ, இடித்து தள்ளவோ எழுத்து மூலமாக தெரிவிக்க நாள் குறிப்பிட்டு அறிக்கை அனுப்பப்படும்.<br><br>அவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் ஒரு மனு மூலமாக அவ்வித வேலைகளை எடுத்துவிடவோ மாற்றியமைக்கவோ இடித்து தள்ளிவிடவோ கூடாதென நிறைவேற்ற அலுவலருக்கு எடுத்துக் காட்டத் தவறினால் அவ்வலுவலர் அவ்வாறு செய்யப்பட்டவைகளை நீக்கிவிடவோ, இடம் மாற்றியமைக்கவோ இடித்துத் தள்ளி விடவோ உரிமையுண்டு. அத்துடன் அம்மாதிரி மாற்றி அமைப்பதற்கு<br><br>(அ) நீக்குவதற்கு ஆகின்ற செலவுகளை அந்த நபரிடமிருந்து பெறவும் உரிமையுண்டு | 49.Fines:- If one deviates from the above rules they will be subject to following punishments:-<br><br>a) A fine of Rs.1000/- will be levied; or<br>b) A further recurring fine of Rs.100 per day also be levied if one continuous of deviate from the rules even after he receives a notice from the municipal authorities. All owner or a builder on his behalf who starts construction in deviation to the rules of the municipality will be issued a notice by the Municipal Commissioner to remove, alter or demolish it on a particular day.<br><br>Contrary to the notice of the builder on the owner fails to justify his construction and represents its needlessness to remove oralter the municipality has the right to remove or alter or demolished the construction and collect the charges for such acts from him. If one fails to abide by the conditions it is informed that he is liable for punishments stated above.<br><br>c) 1). In case of transfer of the right of the construction, the receipt of the payment of charges should also be transferred to the new names on proper application to the municipality. Otherwise such the connection will be considered illegal and additional service charges for connection and fixed deposit will be collected.<br>2) An additional surcharge of Rs.10/- per month will be collected from the owner if the service charges are not paid within 15 days or the receipt of the notice from the Municipal Commissioner. |

| | |
|---|---|
| (ஆ) நிபந்தனைக்கு கட்டுப்படாவிடில் மேற்கூறப்பட்ட நடைமுறையிலுள்ள தண்டனைகளுக்கு உள்ளாவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.<br><br>(இ) (1) பாதாள சாக்கடை இணைப்பு எடுத்தவர்கள் இணைப்பிற்கான தொகையை செலுத்தி ரசீதுகளை உரிமை மாற்றம் செய்வதாக இருந்தாலும் நகராட்சிக்கு முறையாக விண்ணப்பம் செய்து பெயர் மாற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய தவறினால் இணைப்பு முறையற்ற இணைப்பாக கருதி அதற்கு கூடுதலாக இணைப்புக் கட்டணம் வைப்புத் தொகை வசூல் செய்யப்படும்.<br><br>(2) வீட்டின் சொந்தக்காரர் கழிவுநீர் பராமரிப்பு கட்டணம் கட்ட தவறும் பட்சத்தில் நகராட்சி ஆணையர் அவர்களால் அறிவிப்பு கொடுக்கப்பட்ட 15 நாட்களுக்குள் கட்ட தவறினால் சர்சார்ஜ் மாதத்திற்கு ரூ.10 வீதம் செலுத்த வேண்டிய கட்டணத்துடன் சேர்த்து **வசூல் செய்யப்படும்.** | |
| **<u>பொது விதிகள்</u>** | **GENERAL RULES** |
| 1. எவரும் கழிவுநீர் செல்லும் குழாயின் பாதையில் வேண்டுமென்றோ (அ) அசட்டையாகவோ இணைப்புகளை சேதப்படுத்தக்கூடாது | 1.No one should damage the drainage pipe knowingly or unknowingly |
| 2.கழிவுநீர் பாதையில் உள்ள ஆள் நுழையும் துவாரங்களில் உள்ள மூடிகளை எடுத்து செல்லவோ (அ) திருடிச் செல்லவோ கூடாது. இவ்வாறு செய்தால் காவல்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | 2.No one take away or steal the lids of the manholes, police action will be taken against such persons |
| 3.கழிவுநீர் பாதையில் காற்று வெளியில் செல்வதற்காக வைத்துள்ள காற்று போக்கி குழாய்களையும் அதன் உபகரணங்களையும் சேதப்படுத்தவோ எடுத்து மாற்றியமைக்கவோ கூடாது. அவ்வாறு செய்தால் துணை விதிகளின்படி நடவடிக்கை எடுக்க நகர்மன்றத்திற்கு அதிகாரம் உண்டு | 3.The Municipal has rights to take action as per the sub rules against persons altering or damaging ventilation pipes for air facilities in the course of the drainage |
| 4.கழிவுநீர் பாதையில் பந்தல் போடுவதற்கு குழி வெட்டுவதோ (அ) கட்டிடம் கட்டுவதற்கு குழிகள் தோண்டவோ கூடாது. இவ்வாறு செய்வதனால் நகராட்சி முன் அனுமதி பெற்று செய்தல் வேண்டும். நகராட்சியின் அனுமதி பெறாமல் செய்தால் அதற்கு அபராதம் ரூ.1000 வரை விதிக்கப்படும். | 4.No pits for any erection of pandals or constructing building should be dug in the course of the drainage. If necessary they should do it only with the consent of the municipality. Otherwise a fine of Rs.1000/- will be levied against any unapproved action |
| 5.கழிவுநீர் குழாயில் அடைப்பு ஏற்பட்டால் உடனே நகராட்சி அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தல் வேண்டும். இல்லையென்றால் தாமாகவே சாலையை வெட்டி வேறு இடங்களில் தண்ணீர் தேங்குமாறு செய்யக் கூடாது. தவறினால் காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு நடவடிக்கை தொடரப்படும் | 5.Any block in course of the drainage should immediately be intimated to the municipal authorities. They should under no circumstances dig any pit them selves creating any stagnation of water |
| 6. கழிவுநீர் பாதையில் அனுமதித்துள்ள ஆள்நுழையும் துவாரங்களில் மழை வெள்ளம் இதர சாக்கடை இதர துவாரங்களை உடைத்து உள்ளே செல்லுமாறு செய்தல் கூடாது. இவ்வாறு செய்வது நகராட்சியின் அதிகாரிகளின் கவனத்திற்கு வந்தால் கடும் நடவடிக்கை எடுப்பதுடன் ரூ.1000 வரை அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | 6.The rainwater or other drainage water should not enter the manholes breaking away the holes. Serious action will be taken against them and punishment up to a fine of Rs.1000 will be levied when it comes to the notice of the municipal authorities |

| | |
|---|---|
| 7. கழிவுநீர் பாதையில் உள்ள ஆள்நுழையும் துவாரம் காற்றி போக்கி வைத்துள்ள இடத்தில் குப்பையை கொட்டி இவைகளை மூடுதல் கூடாது. அவ்வாறு செய்யப்படுபவர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன் ரூ.100 வரை ஒவ்வொரு நாளுக்கும் அபராதம் விதிக்கப்படும் | 7.No rubbish should be thrown out that would cover the manhole or their ventilation provision. Service action will be taken against person who commit such and they liable to pay a fine of Rs.100 per day. |
| 8.துணை விதிகள் 6 (அ)ல் கண்டுள்ள பொருட்கள் அனைத்தும் இணைப்பாளர் செப்பனிடுபவர் கொள்முதல் செய்து அவ்வாறு செய்யப்பட்ட பொருட்களை நகராட்சிப் பொறியாளர், ஆணையர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் பொருட்களை பார்வையிட்டு பொருட்கள் தர நிர்ணயத்திற்கு உட்பட்ட வகையை சார்ந்ததாக இருப்பின் இணைப்பு கொடுப்பதை நடவடிக்கை தொடர வேண்டும். கழிவுநீர் இணைப்புகளை வீட்டினுள் முழுமையாக பணிகள் முடிவு பெற்ற பின் இணைப்பாளர், செப்பனிடுபவர் இதற்காக உள்ள விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து நகராட்சிப் பொறியாளர், ஆணையர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் பிரதான குழாயிலிருந்து தேவையான அமைப்புகள் பொருத்தி இணைப்புகள் வழங்கப்பட வேண்டும். பணிகள் முடிந்தவுடன் பணி முடிவு சான்றிதழ் அங்கீகாரம் பெற்றவரால் கையொப்பம் இட்டு நகராட்சிக்கு கொடுக்க வேண்டும். | 8.Things stated in Sub-rule 6a brought by the builder need be scrutinized and approved on satisfaction of standard specifications and permission granted for drainage connection. On Completion of the work the owner or the builder should apply in the prescribed form and connection permission obtained from the commissioner, engineer or an authorized official. Alter the work is over the completion report duly signed by the competent person should be furnished to the municipality |
| 9.கழிவுநீர் இணைப்புகளில் பழுது ஏற்பட்டாலோ (அ) கசிவு ஏற்பட்டாலோ பழுதடைந்த குழாய்களை மாற்ற வேண்டியிருந்தாலோ (அ) நீட்டிப்பு செய்யும் பணிகளாக இருந்தாலோ பணிகளை மேற்கண்ட துணை விதிகளுக்கு உட்பட்டு நடைமுறையை பின்பற்றி செய்யாமலும், புதிய பணிகள், நீட்டிப்பு பணிகள், மாற்றம் செய்யும் பணிகள், செப்பனிடுதல் பணிகளை நகராட்சிக்கு தெரிவிக்காமல் செய்யப்பட்டாலும் பின்னர் தெரிய வந்தால் உரிமத்தை ரத்து செய்து வைப்புத்தொகையை பறிமுதல்செய்து மேல்நடவடிக்கை தொடரப்படும். | 9.If without the knowledge of the municipality, any work of repair for damage, leakage or the extensions of the service is undertaken against the sub-rules the license granted earlier will be cancelled, deposit forfeited and further proceedings initiated |
| 10.கழிவுநீர் இணைப்பு பழுதுபார்த்தல் பணிகளை செய்யும் ஒவ்வொருவரும் கழிவு நீர் இணைப்பு வழங்கும்போது அதில் நகர்மன்றத்தால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் பதிவு செய்து உரிய அங்கீகாரம் பெற்ற அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படும். இந்த பதிவு செய்த புத்தகத்தை ஒவ்வொரு வாரமும் நகராட்சிக்கு அனுப்பி உரிய கையொப்பம் பெறப்பட வேண்டும். | 10. Every one who undertakes repair work in drainage system should produce the particulars of earlier sanction of its original construction for due scrutiny of the municipal authorities under proper acknowledgement |
| 11. பயன்படுத்தப்படும் எல்லா பொருட்களையும் பயன்படுத்தி இருக்கும் எல்லா பொருட்களும் நிறைவேற்றப்பட்ட எல்லா பணிகளும் நகராட்சிப் பொறியாளர், ஆணையர் அவர்களால் அங்கீகாரம் பெறப்பட்ட அதிகாரிகள் மேற்பார்வையிடப்படுவதற்கும் ஒப்புதல் அளிக்கப்படுவதற்கும் (அ) வழங்கப்படுவதற்கும் உட்பட்டதாகும் | 11.All materials used and all work carried out are subject to the supervision and sanction of the Municipal Commissioner, Engineer or any authorized officer |
| 12. கழிவுநீர் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பைப்புகள், ஒய் பெண்டுகள், டிராப் மற்றும் இதர பொருட்களும் நகராட்சி அலுவலகத்தில் பண்டக சாலைகளில் வைத்துள்ள அரசு தர நிர்ணய கட்டுப்பாட்டு நிலையம் அங்கீகரித்துள்ள மாதிரிகளைச் | 12.The pipes, Y bends, traps and other accessories used in drainage connection should be on par with the things kept in the office or store of the municipality satisfying the specification of the standard control authorities. |

| | |
|---|---|
| சார்ந்ததாக இருக்க வேண்டும். இணைப்பில் பயன்படுத்தப்படும் விஷேச சாதனங்கள் பெண்டு டிராப் முதலியன (அ) இது போன்று தேவைப்படும் இதர பகுதிகள் எவையும் நகர்மன்றம் அங்கீகாரம் பெற்ற அதிகாரிகளால் ஒப்புதல் அளிக்கப்பட்டவை இன்றி பயன்படுத்தக்கூடாது | No pipes, bend or other accessories not approved by the municipality should be made use of |
| 13. ஒரு கட்டிடத்திற்கு குடியிருப்புக்கு இணைக்கப்பட்டுள்ள கழிவுநீர் இணைப்பு நிறுத்தப்பட வேண்டும் (அ) திரும்ப இணைக்கப்பட வேண்டும் என்றாலோ இணைப்பாளர், செப்பனிடுபவர் நகராட்சிப் பொறியாளர், ஆணையர் அவர்களுக்கு எழுத்து மூலமாக விண்ணப்பத்தை செய்து தர வேண்டும். அவ்வாறு இன்றி உரிமம் பெற்ற எவரும் கழிவுநீர் இணைப்பில் தலையிடு செய்தல் கூடாது | 13.If the drainage connections need to be discontinued or renewed the owner or the builder should apply to the municipality in writing and no license should undertake it without prior permission |
| 14.கழிவுநீர் இணைப்பு செப்பனிடுதல் செய்பவர் இந்த துணை விதிகளில் அல்லது ஒழுங்கு விதியை பின்பற்றாமல் இருந்தால் மீறி நடந்தாலும் (அ) நகர்மன்றத்தின் முறைப்படி அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியின் உத்தரவிற்கு கீழ்படிய மறுத்தாலும் (அ) அவரது பணி திருப்திகரமாக இல்லை என்று நிர்வாக அதிகாரி ஆணையர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் அவருடைய உரிமம் ரத்து செய்வதுடன் அபராதமும் விதித்து மேல் நடவடிக்கை தொடரப்படும் | 14.One who does the drainage connection work or repairs without observing the sub-rules or regulations or if he does not obey the order of the municipal authorities or if the work if found to be unsatisfactory and brought to the executive officer or commissioner his license will be cancelled line-levied and further proceedings undertaken against him |
| 15.கழிவுநீர் இணைப்பு, பழுது பார்த்தல், நீட்டித்தல் மற்றும் இதர மராமத்து பணிகள் செய்ய கொடுக்கப்படும் மதிப்பீடு இத்துணை விதிகளின்படியும் இதர சட்டத்திற்கு இணங்க இருக்கப்பட வேண்டும் | 15.The estimate for drainage connection, repairs or extension should be in accordance with the sub-rules and other rules |
| 16. இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் பிற வரிகள், கட்டணங்கள் ஏதேனும் உரிய காலத்தில் செலுத்தாமல் நிலுவையில் இருந்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி சம்பந்தப்பட்ட வீட்டுதாரரின் பாதாள சாக்கடை இணைப்பு துண்டிக்கப்படுவதுடன், விதிகளுக்குட்பட்டு அபராதம் விதித்து மேல் நடவடிக்கை தொடரப்படும் | 16.Municipal authorities has power to disconnect the UGSS House service connection without any intimation if the property tax, water charges and others taxes, charges which are not paid in time as per schedule and action will be taken as per rules and by-law |
| **தண்டனை** | **PUNISHMENT** |
| இந்த துணை விதிகளை மீறி நடப்பவர் யாராக இருந்தாலும் மேலும் குழந்தையாக இருந்தாலும் அந்த குழந்தைகளை அவ்வாறு செய்யாமல் தடுக்க வேண்டும். தவறினால் ரூ.100 வரையிலும் அபராதம் விதிக்கப்படுவதுடன் மேற்சொன்ன துணைவிதிகளை தொடர்ந்து மீறப்படுமேயானால் ரூ.100 தொடர் அபராதம் விதிக்கப்படுவதுடன் காவல்துறை மூலம் சட்டப்படியும் நடவடிக்கை தொடரப்படும | Whoever deviates from the rules (even if a child deviates if he should be prevented from doing it) will levied a fine of Rs.100 and in case of continued deviation or compound (daily) fine of Rs.100 will be levied and legal action through the police executed. |

மேற்கண்டவாறு பாதாள சாக்கடை திட்ட உபவிதி திருத்தத்தினை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

## 15) CHIDAMBARAM MUNICIPAL WATER SUPPLY BYE-LAWS

# சிதம்பரம் நகராட்சி குடிநீர் விநியோக புதுப்பிக்கப்பட்ட விதிகள்

நகராட்சி பகுதியிலுள்ள குடியிருப்புகளுக்கும் மற்றும் இதர இனங்களுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க 1920–ம் ஆண்டு திருத்தப்பட்ட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் 130, 131 (1), (2), (3), 132 (1) , 132 (ஏ), 134, 135, 306, 308 மற்றும் 309 –வது பிரிவுகளின்கீழ் உருவாக்கப்பட்ட துணை விதிகள்

Bye-Law formed undersection 130, 131 (1), (2), (3), 132 (1), 132 (A), 134, 135, 306, 308 and 309 of Tamil Nadu District Municipalities Act 1920 (Revised) for regularizing grant and control of House Service Connections and other types of connection.

நகராட்சியில் புதியதாக வீட்டுக் குழாய் இணைப்பு வழங்குதல், குடிநீர் இணைப்பில் மாற்றம், பழுதுபார்த்தல் மற்றும் குடிநீர் இணைப்பு சரியான முறையில் வைத்து இருத்தல் இவைகள் அடங்கும். இதில் வீட்டு உபயோகத்திற்கு அல்லாத பிற இனங்களும் அடங்கும். இந்த விதிகளின்கீழ் குடிநீர் வீணாவதைத் தடுக்கவும், குடிநீர் உபயோக அளவை கணக்கிடவும், குடிநீர் குழாய் இணைப்பில் அளவுமானி பொருத்துதல், குடிநீர் குழாய் இணைப்பில் தொட்டிகள் அமைத்தல், பருவமுறை குடிநீர் கட்டணம் உயர்வு மற்றும் தீ விபத்திற்கு குடிநீர் வழங்குதல் ஆகியவைகள் இந்த துணை விதிகளில் இடம் பெறுகின்றன.

New Water Supply House Service Connection granted, transfer, extension, alterations, repairs and al so proper maintenance in accordance with the bye-law framed. Provisions were made under this act, to avoid protected water supply wastage measuring the quantity of supply or water, fixing water meters, providing water supply tanks in Houses Increased water charges and fire hydrants etc.,

1. குடிநீர் இணைப்பு பெறுவதற்காக தமிழ்நாடு 1920–ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டத் துணை விதிகள் 131–ல் (1) வது பகுதி (அ) 132–வது விதிகள் ம ற்றும் திருத்தப்பட்ட விதிகளின்படி ஒவ்வொரு குழாய் இணைப்பிற்கான விண்ணப்பத்தை கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவர் வீட்டு உரிமையாளரிடமிருந்து எழுத்து மூலமாக ஒப்புதல் கடிதம் பெற்று படிவம் (அ) மற்றும் மதிப்பீடு தயார் செய்து, பதிவு கட்டணம் ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) செலுத்தி விண்ணப்பம் வழங்கப்படும். மேலும், குறிப்பிடப்படும் வைப்புத் தொகை மற்றும் மதிப்பீட்டு கட்டணங்களை நகராட்சியில் செலுத்தி உத்தரவு பெ ற்று குழாய் இணைப்பிற்கான பணிகள் துவங்கப்பட வேண்டும்.

1. Application for the House Service Connection under sub-section 1 (A) of section 131, section 132 of the Tamil Nadu District Municipalities Act (Revised) 1920, as amended should be individually submitted by the owner of the premises by himself or through and authorized representative in the form “A” with the Registration fee of Rs.100/- along with estimate to be submitted to the Municipal Commissioner. Based on the seniority of making the payment of registration charges, a list will be maintained upon the date of registration fees paid in the Municipal Office. Further after remitting the prescribed amount towards estimate charges and after obtaining the permission from the Municipality, the connection works should be commenced.

1. (அ) குடிநீர் இணைப்பிற்காக தயாரிக்கப்படும் மொத்த மதிப்பீட்டில் 20 சதவிகிதம் சென்டேஜ் கட்டணம் மற்றும் ஆய்வு கட்டணமாக வசூலிக்கப்படும். குறைந்த அளவு ரூ.750/– வசூலிக்கப்படும்.

1.(a) New Service Connection estimate charges will include a centage of 20 % on the net value of the estimate. Supervision charges subject to a minimum of Rs.750/- only.

1.(ஆ) குடிநீர் திட்டடத்தில் அரசு கட்டிடங்களுக்கு வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்கள் முன்பணமாக நகராட்சிக்கு செலுத்த வேண்டியதில்லை. இணைப்பு உத்தரவு பெற்ற பின்பு செலுத்த வேண்டும்.

1.(b) In Case of effecting New House Service Connection to Government buildings the value of the estimate supervision charges calculated shall not be payable in advance to the Executive Authority.

1. (இ) மேற்கண்ட கட்டணங்களில் வைப்புத் தொகை

1.(c) The charges levied for giving

தவிர இதர கட்டணங்கள் எதுவும் திருப்பித்தரப்படமாட்டாது. செலுத்திய தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது.

connection except the deposit will not be refunded on any account and no interest will be paid for the said deposit amount.

**2.** குடியிருப்பு உபயோகத்திற்கோ மற்றும் குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்கோ வழங்கப்படும் இணைப்புகளுக்கு அளவு மானிகள் பொருத்தப்பட்டு சதுர அடி முறையில் கட்டணங்கள் வசூல் செய்யப்படும். ஏற்கனவே அளவுமானி பொருத்தப்படாமல் டேப்ரேட் விகிதத்தில் உள்ள இணைப்புகளுக்கு **60** நாட்களுக்குள் அறிவிப்பு அனுப்பி அளவுமானி இணைப்பாக மாற்றப்படும். அவ்வாறு மாற்றப்படாமல் இருந்தால் மறு அறிவிப்பின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

2. The supply of water for domestic and Non-domestic House service connections shall be given based on the building square feet basis. The existing tap rate system if any (without fixing metre) should be converted into meter system. After issuing a notice within 60 days. Otherwise this house service connections will be disconnected without any further intimation.

**3.** வழங்கப்படும் குடிநீர் வீட்டு உபயோக காரியங்களுக்கானதாக அல்லது வீட்டு காரியங்களுக்கல்லாததா என்பது பற்றி திருத்தப்பட்டுள்ள தமிழ்நாடு **1920**–ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் **131**–வது பிரிவின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள விரிவுரைகளின்படி ஒவ்வொரு தருணத்திலும் முடிவு செய்யப்படும்.

3. Any dispute regarding the type of usage whether for residential or non residential purpose would be decided based on the section 131 of Tamil Nadu District Municipalities Act 1920 and the explanation there of.

**4.(அ)** ஒரே இணைப்பின் வாயிலாக வீட்டு உபயோக பயன்களுக்கும் அவையல்லாத பிற பயன்களுக்கும் சேர்ந்து எடுக்கப்படும் குடிநீர் வீட்டு உபயோகம் அல்லாத பிற பயன்களுக்கான குடிநீருக்குரிய வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

4.(a) Drinking water used for Both domestic and Non-domestic purpose water supply through a House service connection is utilized, the water charges shall be levied at the non-domestic rates.

**4. (ஆ)** ஆளுகைக்குட்பட்ட நிர்வாகத்திற்குரிய நிறுவனங்களுக்கு கொடுக்கப்படும் குடிநீர் இணைப்புகளுக்கும் கட்டிடங்களின் பரப்பளவுக்கேற்ப குறிப்பிட்டுள்ள விலை விகிதங்களின் வைப்புத் தொகை மற்றும் கட்டணங்கள் வசூல் செய்யப்படும். மேற்படி நிறுவனங்கள் பயன்படுத்தும் குடிநீருக்கான காரியங்களை பொறுத்து வீட்டு உபயோக பயன் மற்றும் அவையல்லாத பிற பயன்களுக்கான வீதங்களில் கட்டணம் வசூலிக்கப்படும்.

4.(b) Even in the case of buildings owned by the Municipality, such water connections will have only meter reading devices but also appropriate rates of chargers will be collected depending upon the domestic or non-domestic use of water by such establishments.

**4.(இ)** சொத்து வரி இல்லாத வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு கொடுக்கப்படமாட்டாது. ஏற்கனவே குடிநீர் இணைப்பு உள்ள கட்டிடங்களை கட்டும் போதோ அல்லது பழுதுகள் பார்க்கும்போதோ நகராட்சி குடிநீர் பயன்படுத்தப்பட்டது ஆணையர் கண்டுபிடித்தால் குடியிருப்பு அல்லாத உபயோகமாக கருதப்பட்டு அதன் வீதத்தில் கட்டணம் வசூலிக்கப்படும்.

4.(c) No connection will be given to the premise to which is not levied property tax. If an existing domestic House service connection is in the building which the same will be reconstructed or modified or major repairs and if protected water supply be utilized this connection will be taken into account as on non-domestic purposes and the rate of charges will be collected accordingly.

**4.(ஈ)** தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக

4.(d) The Municipal council may

ஆணையரகம், சென்னை அவர்களின் அனுமதியுடனும் மற்றும் அவரால் ஒப்புதல் அளிக்கக்கூடிய வரையறுக்களுடன் நகராட்சி மன்றம் தமது நகராட்சி எல்லைக்குட்படாத யாதொரு உள்ளாட்சிக்கோ அல்லது பிற நபருக்கோ குடிநீர் வழங்கலாம்.

sanction new water supply connection to other local bodies or others with in or outer Municipal limit with the prior approval of Chief Engineer, Office of the Commissioner of Municipal Administration, Chennai within the norms prescribed.

5. ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரே ஒரு குடிநீர் குழாய் இணைப்பு மட்டும்தான் வழங்கப்படும். அத்தகைய இணைப்பை கட்டுப்படுத்த நீர்வரத்து கட்டுப்பாட்டு மானி (Flow control Valve) மற்றும் அடைப்பான் பொருத்தப்படும். வேறு பக்கத்து குடியிருப்பு இணைப்புகளிலிருந்தோ அல்லது கொடுக்கப்படவிருக்கும் பயன் இணைப்புகளில் இருந்தோ குடிநீர் வழங்கப்பட மாட்டாது.

5.(a) New House Service Connection to the individual taxed house shall be given by measns of single pipe from the D-System through of ferrule and flow control valve. Water shall not be supplied from another house or building already assessed separately and no connection shall be given from the Existing Connection or a connection proposed to be given for any other premises. The ward house shall mean a building standing alone or multiple building that has been assessed under a single assessment for property tax.

**விளக்கவுரை :**
இத்துணை விதிகளில் இடம் பெறும் "வீடு" எனும் சொல் ஒரே பகுதியாக உள்ள கட்டிடம் அல்லது கட்டிடங்களையோ அல்லது தற்போதைக்கு சொத்துவரிக்காக ஒரே பகுதியாக தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டிடத்தையோ குறிக்கும்.

**Explantion :**
The word "House" as per this bye-law means one portion of the building or Buildings or single assessment of property tax.

**ஆ. அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான இணைப்பு**

**New House Service Connections for multi-storied apartments.**

அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும் பொழுது எத்தனை குடியிருப்புகள் இருந்தாலும் தக்க அளவிலான குழாய் இணைப்பு மட்டும் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நான்கு குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 1 எண். |
| 2. | 5 முதல் 8 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 2 எண்கள். |
| 3. | 9 முதல் 12 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 3 எண்கள். |
| 4. | 13 முதல் 16 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 4 எண்கள். |
| 5. | 17 முதல் 20 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 5 எண்கள். |

For multi-storied apartment buildings connection given shall be of proper size depending upon the no. of dwellings as follows :-

| | | | |
|---|---|---|---|
| 1. | For 4 Flats | 20 mm pipe 15 mm ferrule | 1 No. |
| 2. | 5 to 8 Flats | 20 mm pipe 15 mm ferrule | 2 Nos. |
| 3. | 9 to 12 Flats | 20 mm pipe 15 mm ferrule | 3 Nos. |
| 4. | 13 to 16 Flats | 20 mm pipe 15 mm ferrule | 4 Nos. |
| 5. | 17 to 20 Flats | 20 mm pipe 15 mm ferrule | 5 Nos. |

| | | | |
|---|---|---|---|
| 6. | 21 முதல் 40 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 6 எண்கள். |
| 7. | 41 முதல் 70 குடியிருப்பு வரை | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 7 எண்கள். |
| 8. | 70 குடியிருப்பு களுக்கு மேல் | 20 மி.மீ. பயன்தரும் குழாய் 15 மி.மீ. திருகு குறுங்குழாய் | 8 எண்கள். |

| | | | |
|---|---|---|---|
| 6. | 21 to 40 Flats | 20 mm pipe 15 mm ferrule | 6 Nos. |
| 7. | 41 to 70 Flats | 20 mm pipe 15 mm ferrule | 7 Nos. |
| 8. | Above 70 Flats | 20 mm pipe 15 mm ferrule | 8 Nos. |

அடுக்கு மாடி குடியிருப்புகளுக்கு இணைப்பு வழங்கப்படும்பொழுது ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியாக வரிவிதிப்பு செய்து அனைத்து குடியிருப்போரிடமும் தனித்தனியாக வைப்புத் தொகை மற்றும் கட்டணம் வசூல் செய்யப்படும்.

A separate properly assessment should be levied for each flat and separate estimate amount should be remitted. But a separate property tax assessment should be attained for each flat of the building.

6. இந்து கோவில்கள், மசூதிகள், மாதா கோவில்கள் ஆகியவற்றிற்கு கொடுக்கப்படும் குடிநீர் அருந்துவதற்கு மட்டுமே, அவ்வாறு வழங்கப்படும் குடிநீர் குழாய் இணைப்புகள் கீழ்க்கண்டவாறு வரைமுறைப்படுத்தப்படும்.

6. The supply of potable water to mosques, temples and churches shall be only for drinking purposes. Such supply shall be regularized and considered as follows.

6.(அ) வீட்டு உபயோகத்திற்கு வழங்கப்படும் குடிநீர் இணைப்பு விதிகள் இதற்கும் பொருந்தும்.

6.(a) For big temples, Mosques, Churches etc., the water supply shall strictly be for drinking purpose only and the bye laws will be applicable to Domestic tariff.

7. இத்துணை விதிகளுக்குட்பட்டு குடிநீர் குழாய்களில் உள்ள நீர் விசையின் அளவையும் நீரழுத்தத்தையும் கணக்கில் கொண்டு வீட்டுக் குழாய் இணைப்புகளில் அளவு, அவற்றில் பொருத்த வேண்டிய அடைப்பான்கள் திருகுகள் மற்றும் இதர இனங்களையும், குழாய் நீளத்தையும் கணக்கிடுவதை பொறியாளர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர் நிர்ணயம் செய்வார். அத ற்கு தக்கபடி கீழ்க்கண்டவாறு நிர்ணய அளவுகள் அமைக்கப்படும்.

7. For residential all the pipe shall be as per thee table below or as per the pipes approved by the Chief Engineer O/o Commissionerate of Municipal Administration and shall not on any account be more than 15 mm.

7. (1) 15 எம்.எம். குழாய் இணைப்பு – 10 எம். எம். திருகு குறுங்குழாய் (30 மீட்டர் நீளம் வரை)

7.(i) Upto 30 m, 15 mm pipe connection with 10 mm ferrule.

7. (2) 20 எம்.எம். குழாய் இணைப்பு – 15 எம்.எம். திருகு குறுங்குழாய் (90 மீட்டர் நீளம் வரை)

7.(ii) Upto 90 m, 20 mm pipe connection with 15 mm ferrule.

மேற்கண்ட இனங்களை தவிர வேறு அளவு தேவைப்பட்டால் அதை முடிவு செய்ய தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் அனுமதி பெற்றுத்தான் இணைப்புகள் வழங்கப்படும். அனைத்து இணைப்புகள், திருகு குறுங்குழாய்கள் (Flow Control Valve) மற்றும் இதர உபகரணங்கள் (accessories) சோதனை செய்து தர நிர்ணய சான்றிதழ் பெற்றதாகவோ அல்லது தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டதாகவோ இருத்தல் அவசியம். ஏக்காரணங்களைக் கொண்டும் இந்த

In case any other measurement is found necessary only after getting the permission of the Chief Engineer Office of the Commissioner of Municipal Administration. The connections will be given. The flow control valves pipes to be used in all cases should be tested and bear ISI Certificate.

நிர்ணய குழாயின் விட்டம் **15** மி.மீ. அளவிற்கு மேல் இருத்தல் கூடாது. குடிநீர் நுகர்வோர் குழாய்கள் இணைப்புகள் ஆகியவை பொறியாளர் குறிப்பிடும்படி இந்திய நிர்ணய நிறுவனத்தின் தரத்தின் குறிப்பிற்கு உடன்பட்டதாய் இருத்தல் வேண்டும்.

**8.** குடிநீர் இணைப்பு எடுக்கப்படும் தலைப்பிடத்தில் நேர்மட்ட தூரம் **90** மீட்டருக்கு அதிகமாக இருப்பின் அத்தகைய வீட்டுக் குழாய் இணைப்புகள் நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளரின் ஒப்புதலின் பேரில் மட்டுமே வழங்கப்படும். அத்தகைய பயன் இணைப்புகளின் தன்மை, அளவு ஆகியவை நகராட்சி நிர்வாக ஆணையரகம் தலைமைப் பொறியாளரால் நிர்ணயம் செய்யததாக இருக்க வேண்டும்.

8. If the distance between the Distribution mains and the House Service Connection exceeds 90 m, then the connection shall be effected only after the approval obtained from the Chief Engineer, Commissionerate of Municipal Administration.

**9.**(அ) குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்படும் இணைப்புகள் சேர்ந்த குழாய்கள், இணைப்புகள் யாவையும் நகராட்சி அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவர்களால் எளிதாகப் பார்வையிட வசதியாக பொருத்துதல் வேண்டும். வீட்டு உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் ஒவ்வொருவரும் குடிநீர் இணைப்புகளையும் பார்வையிட வசதி செய்து தர வேண்டும். அவ்வாறு பார்வையிட தடை ஏற்படுத்தினால் அந்தக் குழாய் இணைப்புகளை பார்வையிட முடியாது என்று கருதி குழாய் இணைப்பு துண்டிக்கப்படும்.

9.(a) New HSC connection laid to the residential premises shall be easily visible for inspection by the Municipal staff. The owner of the premises or the occupiers shall facilitate to inspect the connection by the Municipal staff. If in any place, the inspection is not possible due to the willful act of restrained by the owner or the occupier by any means, the said connection will be disconnected considering as unlawful connection.

**9.**(ஆ) குடிநீர் குழாயில் உள்ள திறப்பான்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கும் வகையில் அமைக்கக்கூடாது அல்லது குழாயிலிருந்து சிந்தும் தண்ணீரை மற்றும் வீணாகும் குடிநீர் நகராட்சியால் அமைக்கப்பட்டு இருக்கும் கழிவுநீர் கால்வாயிலோ அல்லது கழிவுநீர் குழாயிலோ செல்லும் வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

9.(b) The water tap shall not be kept in such a manner to be immersed in water. The water running out from the pipe shall be properly routed by a system to reach the nearest Municipal drain or sewer.

**10.**(அ) அளவுமானிகள் நகராட்சி ஆணையாளரின் ஒப்புதலுக்குட்பட்டு வீடுகளின் சொந்தக்காரர்களோலோ அல்லது வாடகை தாரர்களாலோ வழங்கப்பட வேண்டும். பொருத்தப்பட்டுள்ள அளவுமானிகள் எப்போதும் நகராட்சி மன்ற அலுவலர்களால் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற ஊழியர்களால் பூட்டி வைக்கப்பட்டு இருக்கும் அல்லது மூடி முத்திரை செய்யப்பட்டு இருக்கும் அளவு மானியின் அளவுகள் ஒவ்வொரு திங்களும் கணக்கிடப்பட்டு பராமரிக்கப்பட்டு வரப்படும்.

10.(a) Water usage Meter shall be supplied by the owner or occupier of the premises subject to the approval of Municipal Commissioner. The meter will be fined and shall always be under the lock and key system by the Municipal staff. The usage of said meters will be read by the Municipal staff every month and recorded.

**10.** (ஆ) அளவு மானி குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளர் வாங்கி பொருத்த வேண்டும். பராமரிப்பு கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ.**5/–** வசூலிக்கப்படும்.

10.(b) Meters shall be supplied by the owner or the occupier of the building and maintenance charges of Rs.5/- per month will be levied.

**10.**(இ) வீட்டின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளரால் பொருத்தப்பட்ட அளவுமானிகள் பழுதடைந்துவிட்டால் உரிமையாளர் சொந்தச் செலவில் உரிய அனுமதி பெற்று அளவுமானிகளைப் பழுதுபார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். பழுதுபார்த்தல் பணியை

10.(c) If the meters fixed by the owner of the house or the tenant becomes defective then such owner or tenant will arrange for the repair of the meters at his own cost, after getting permission.

நகராட்சிப் பொறியாளர் மேற்பார்வையில் இரண்டு திங்கள் காலத்திற்குள் ஆணையரின் உத்தரவு பெற்று செய்தல் வேண்டும். மேலும் பழுதுபார்க்கப்பட்ட அளவுமானியை சம்பந்தப்பட்ட பொறுப்பு பொறியாளரிடம் ஒப்படைத்து சரியாக இயங்குகிறதா என ஆய்வு செய்த பின்னரே பொருத்தப்பட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் தருவாயில் எவ்வித முன்னறிவிப்புமின்றி இணைப்பு துண்டிக்கப்படும்.

The repair work shall be done within a period of two months under the Supervision of the Municipal Engineer after getting necessary permission from the Commissioner. The meter after repair should be handed over to the Engineer in charge. Such meters should be functional to the satisfaction of the incharge Engineer and only there after the meters should be fixed up again, Non-compliance will the above condition wil entail disconnection of the water supply.

10.(ஈ) அளவுமானி பழுதாகும் சமயங்களில் வழங்கப்படும் குடிநீருக்கான கட்டணம் 16–வது துணை விதியில் வரையறுக்கப்பட்டுள்ள விகிதங்களின்படி குடிநீர் கட்டணங்கள் வசூல் செய்யப்படும்.

10.(d) During the repair time of water meter, water charges will be levied as per bye-law No.16.

11. குடிநீர் இணைப்புக்கு வைப்புத் தொகை கீழ்க்கண்டவாறு வசூல் செய்யப்படும்.

11. Security Deposit in advance towards payment of shall be collected in the manner as below person desiring to obtain water connections shall remit the deposit.

**நடைமுறைப்படுத்தப்படவுள்ள குடிநீர் வைப்புத் தொகை**

**Proposed Deposit amount**

**11. (அ) குடியிருப்பு உபயோகம்**

வைப்புத் தொகை ரூ. 5,000/–

**11.(a) Domestic Purpose :**

Deposit Amount Rs. 5,000/-

**11. (ஆ) வணிக உபயோகம்**

வைப்புத் தொகை ரூ.10,000/–

**11.(b) Commercial Purpose :**

Deposit Amount Rs.10,000/-

**11. (இ) தொழில் சார்ந்த உபயோகம்**

வைப்புத் தொகை ரூ.20,000/–

**11.(c) Profession Purpose :**

Deposit Amount Rs.20,000/-

12. தற்போது நடைமுறைப்படுத்தப்படவுள்ள மாதாந்திர குடிநீர் கட்டணம்

12. Proposed monthly water tariff amount

**12. (அ) குடியிருப்பு உபயோகம்**

மாதாந்திர கட்டணம் ரூ.100/–

**12.(a) Domestic Purpose :**

Monthly Charges Rs.100/-

**12. (ஆ) வணிக உபயோகம்**

மாதாந்திர கட்டணம் ரூ.200/–

**12.(b) Commercial Purpose :**

Monthly Charges Rs.200/-

**12. (இ) தொழில் சார்ந்த உபயோகம்**

மாதாந்திர கட்டணம் ரூ.300/–

**12.(c) Profession Purpose :**

Monthly Charges Rs.300/-

13.(அ) அளவுமானி முறையிலான கட்டணத்தை, குடிநீர் கட்டணம் கேட்பு அறிவிப்பு கிடைத்த 15 நாட்களுக்குள் நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும்.

13.(a) The water charges shall be remitted in 15 days from the date of receipt of demand notice demand for

ஒவ்வொரு திங்களும் 10–ம் தேதிக்குள் அனுப்பும் குடிநீர் கட்டண கேட்பு அறிவிப்பு அதற்கு முந்தைய திங்களில் உபயோகிக்கப்பட்ட குடிநீர் அளவுக்கு உரியதாகும்.

water charges will be made before 10th of every month and it is for the consumption for the previous month.

13.(ஆ) மேற்கண்ட துணை விதிகளில் சொல்லப்பட்ட கட்டணங்கள் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் நகராட்சிக்கு செலுத்தப்படாமல் இருக்குமானால் ஆணையருக்கு எப்போது வேண்டுமானாலும் இணைப்பை துண்டிக்க அதிகாரம் உண்டு. நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவுக்குள் குடிநீர் கட்டணம் செலுத்தப்படாத இணைப்புகள் துண்டிப்பு செய்யும் பட்சத்தில் ஏற்படும் சகல இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் நகராட்சியின் ஆணையர் பொறுப்பு அல்ல. குடியிருப்போர் அல்லது வீட்டின் உரிமையாளரே இதற்கு முழு பொறுப்பு ஏற்க வேண்டும்.

13.(b) If the water charges, are not remitted within the time prescribed under the bye-law above mentioned. The Commissioner of the Municipality is empowered to disconnect the water supply at any time. The Municipal Commissioner will not be liable for any loss or damage on account of such disconnection of water supply, the tenant or the owner of the house alone is responsible.

13. (இ) இந்த துணை விதிகளில் சொல்லப்பட்ட சட்ட திட்டங்களின்படி குடிநீர் வழங்குவதற்கு உரிய கட்டணம் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தப்படவில்லை என்றால் சொத்து வரி வசூல் செய்யும் முறையில் உள்ள விதிகள் பின்பற்றி வசூல் செய்யப்படும்.

13.(c) Payment of all water charges supplied under the terms and conditions laid down in bye-laws if not made by the party with in the time stipulated will be recoverable in the same manner pertaining with the norms as in property tax collection.

13.(ஈ) நிர்ணயிக்கப்பட்ட குடிநீர் கட்டணம் குறிப்பிட்ட காலத்தில், செலுத்தாததால் துண்டிக்கப்படும் இணைப்புக்கு துண்டிப்பு கட்டணமாக ரூ.500/–ம் மறு இணைப்பு கட்டணம் ரூ.500/– ஆக மொத்தம் ரூ.1000/– யை வசூல் செய்யப்படும். இத்தொகை கட்டணத்துடன் சேர்த்து வசூலிக்கப்படும் அல்லது தனியாக நகராட்சியில் செலுத்த வேண்டும்.

13.(d) For disconnected service connections under non payment of water charges then disconnection charges of Rs.500/- + reconnection charges of Rs.500/- Totally Rs.1000/- will be charged.

14. குடிநீர் உபயோகப்படுத்தாத ஒரு காலாண்டின் பகுதிக்கான குடிநீர் கட்டணத்தில் தள்ளுபடி எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது. அவ்வாறு குடிநீர் பயன்படுத்தப்படாமலிருக்கும் ஒவ்வொரு முழு காலாண்டிற்கும் ஆணையர் கட்டண தள்ளுபடி வழங்கலாம். ஆனால் இந்த குடிநீர் இணைப்பை வீட்டு உரிமைதாரர் வேண்டுகோளின்படி தற்காலிகமாக துண்டிப்பு செய்து கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு துண்டிக்கப்படும் போது துண்டிப்பு கட்டணமாக ரூ.500/–ம் மறு இணைப்புக் கட்டணமாக ரூ.500/–ம் ஒவ்வொரு முறையும் வசூல் செய்யப்படும்.

14. No remission for non use of drinking water shall not be granted for a portion of quarter. Remission may be granted by the Executive Authority for non use of water for full quarter subject to previous intimation of such non use with request to close the water supply temporarily and subsequent demand for revision. The charges for such temporary disconnection shall be Rs.500/- and reconnection charges shall be Rs.500/- on each occasion.

குறிப்பு : இந்த துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள காலாண்டு என்பது மூன்று முழு நாளிட்ட திங்கள் அல்லது 90 நாட்கள் என்று பொருள் கொள்ள வேண்டும்.

N.B. : The word ‘quarter’in this bye-law means three full months or 90 days.

15.(அ) அளவுமானியின் அளவுகளிலோ அல்லது அளவுமானியில் பிற பழுதுகளோ இருந்தால் இது குறித்த விவரங்களுடன் 30 நாட்களுக்குள் ரூ.100/– வைப்புத் தொகையாக செலுத்தி எழுத்துமூலம் நகராட்சிக்கு அறிவிப்பு செய்ய வேண்டும்.

15.(a) Persons aggrieved regarding the meter readings and disputes against the meter reading 30 days of the reading which is disputed and shall be of faulty accompanied by a deposit of Rs.100/-. Eastimate for aggrieved by any defect in the estimates shall be on writing.

**15.(ஆ)** மேலே நிர்ணயிக்கப்பட்ட கால கெடுவுக்குள் செய்யப்படாத புகார்களோ அல்லது வைப்புத் தொகை செலுத்தாமல் செய்யப்படும் புகார்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

15.(b) Complaint not made within the above said period or not accompanied by the request deposit will not be entertained. No compliant beyond such period and complaint not accompanied by such deposit will be entertained.

**15.(இ)** அளவு மானியின் அளவுகளில் அல்லது அளவுமானியில் பழுதுகள் இருப்பது பரிசீலனை செய்து ஆய்வக்குப் பின் தெரிய வந்தால் வைப்புத் தொகை திருப்பித் தரப்படும். அவ்வாறின்றி அளவுமானி சரியாக இயங்கி இருந்தால் அல்லது அளவுமானியில் பழுதுகள் இல்லை என்ற நிலை இருந்தால் வைப்புத் தொகை பறிமுதல் செய்யப்படும்.

